Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

மலர் 30 | ஹேவிளம்பி கார்த்திகை 1957 நவம்பர் | இதழ் 11

ஆலய அற்புதங்கள்

ஆசிரியர்

ஆலயம் சிறப்புவகை : “ஆலயந்தானும் அரனெனத் தொழுமே” என்பது சிவஞான போதம். இவ்வடியில் காணும் கருத்து எத்தனை பெருமையும் தூய்மையும் உடையது என்று சற்று ஆராயுங்கள். அரன் எல்லாவற்றிலும் பெருமை யுடையவன். அதைப்போலவே தூய்மையும் உடையவன். அவன் எழுந்தருளியிருக்கும் இருக்கை ஆலயமாகும். அதுவும் அரனைப்போல இருப்பது என்றால் அதுவும் பெருமையும் தூய்மையும் உடையது ஆகும். அது தொழுபவர் நெஞ்சில் மட்டும் அல்ல. உண்மையாகவே இருக்கவேண்டும். அல்ல. அது அளவுகடந்த பெருமையும் தூய்மையும் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் மக்கள் அதனை அரனெனத் தொழுவார்கள். ஆகவே ஆலயத்தைக் கட்டி அதிலரனை யெழுந்தருளிவிக்கும் மக்கள் அவனைப்போலவே ஆலயத்தையும் பெருமையும் தூய்மையும் உடையதாகச் செய்ய வேண்டும்.

பெருமையும் தூய்மையும் : நமது ஆலயங்கள் பெருமையும் தூய்மையும் கொண்டிருக்கின்றவா? அவைகளி லும் மிதமீறிய தன்மையும் கொண்டிருக்கின்றனவா? அவ் வாறு கொண்டிருந்தால்தானே நாம் அந்த அருமைக் கருத் துக்குப் பாத்திரங்கள் ஆவோம். அப்படியில்லாதவரை நாம்

அந்த ஆலயத்திற்கு உரிய அருகர்கள் ஆக மாட்டோம். கிறிஸ்தவர்களும் இசுலாமியர்களும் தங்கள் தங்கள் ஆலயங்களைப் பெருமையிலும் தூய்மையிலும் வைத்திருப்பது கண்கூடு. ஆகவே அங்கே அச்சமயத்தினர் தொழுதற்கு உரியவர்கள் ஆவார்கள். நம் ஆலயங்களில் தற்கால நிலைமையைக் கண்டால் அந்தக் கருத்தே இல்லாதவர்கள் என்று எண்ணப் பட்டவர்கள் ஆவோம். இந்த முறையில் நாம் வாளா இருக்காமல் நம் ஆலயங்களின் நோக்கத்தை அறிந்து அவைகளைப் பெருமையிலும் தூய்மையிலும் இலங்க வைப்பது நமது கடமை.

அவைகளின் நோக்கம் : ஆலயங்களைக் கட்டின நமது முன்னோர்கள் அவ்வாலயங்களை என்ன நோக்கத்துடன் கட்டினார்கள் என்றும், அவைகளை என்ன முறையில் அந் நோக்கங்களில் இருத்திவைக்க வேண்டும் என்று விரும்பினார்கள் என்றும் அன்னோர்கள் வெகு தெளிவாகவும் உறுதியாகவும் கூறியிருக்கிறார்கள். ஆலயங்களில் ஒரு சிறிது பழுது ஏற்பட்டாலும் அவைகள் பெருமையிலும் தூய்மையிலும் கெட்டுவிடுமல்லவா ? கட்டினவர்கள் தாம் இருக்கும்போது அந்தப் பண்புகளில் அவைகளை வைத்துக்கொள்ள முடியும். இறந்த பிறகும் அதே நிலையில் இருக்கவேண்டும் என்றெண்ணிப் பெருந்தொகைகளையும் நிலங்களையும் கொடுத்து எழுதிவைத்தார்கள். ஆகவே நிரந்தரமாகப் பெருமையும் தூய்மையும் அவைகளில் படரவேண்டும் என்பது அவர்கள் கருத்து. இதை நெஞ்சிற்கொண்டு கல்லிலும் அக் கருத்தைத் தீட்டிவைத்தார்கள். அவர்களுடைய கருத்தின் நோக்கம் இதனாற்றெரிகின்றதன்றோ ?

கட்டினவன் கருத்து : தென் பாண்டி நாட்டில் மிகச் சிறப்போடு ஆண்ட பராக்கிரம பாண்டியன் (கி. பி. 1422 முதல் 1463 வரை) தான் மனத்தால் உருவப்படுத்திப் பின் கல்லால் எழுப்பின தென் காசி விசுவநாதர் கோயிலில் ஒரு கல் பழுதுபட்டாலும் அதனை எவராவது தூய்மைப் படுத்தினால் அவருடைய தாள்கள் தன் தலை மேலன என்று கருதிக் கல் எழுத்தில் வெளியிட்டான் என்றால் அவன்

மேன்மையான நோக்கம் எத்தனை பெருமையுடையது பாருங்கள். அவன் எழுதிய கருத்தைத் தெளிவுபடக் கூறும் பாடல்,

" ஆராயினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே "

என்பதாகும். அவன் கருத்தைப் பின் வந்த மக்கள் போற்றினார்களா ? அந்தோ அக்கோயில் என்ன பரிதாபமான நிலையில் தற்போது இருக்கிறது.

பராமரிப்பு : நமது குடியிருப்பு வீட்டைச் சிறிது குப்பையோ பொத்தலோ இல்லாமல் தூய்மையாக வைக்கிறோம். படங்களை மாட்டிக் கோலம் வரைந்து அழகு படுத்துகிறோம். இறைவன் வசிக்கும் பெருமை பொருந்திய கோவிலை (கோ + இல்) என்ன நிலைமையில் வைத்திருக்க வேண்டியது நமது கடமை ? இறைவன் அகில அண்டத்திற்கும் முதல்வன். ஆகையால் அவனை எழுந்தருளச் செய்யும் புனித இல்லத்தை மிகத் தூய்மையாக வைத்திருக்க வேண்டாமா ? அதற்காக அறக் காப்பாளர்களை அரசியலாரும் நியமித்துள்ளார்கள். அவர்கள் கடமை என்ன ? ஒரு சிறிதாவது பழுது ஏற்பட்டால் உடனே செப்பனிட வேண்டும். பணமில்லை என்று கூறுவது வெறும் சாக்கு. தம்மால் முடியாவிட்டால் அப் பதவியை விட்டுவிடுதலே முறையாகும்.

நந்திகேசர் ஆலயம் : திருச்சிவட்டம் துறையூருக்குச் சென்றேன். அங்கே நந்திகேசுவர ஆலயம் என்ற பெருமை பெற்ற ஆலயம் இருக்கிறது. அந்தப் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எழுத்தின் பிறப்பைப் பற்றிய வட மொழிச் சுலோகம் நமது மனத்தில் தோன்றும். அதனை நந்திகேசுர ஆகமம் கூறுகிறது. நடராசப் பெருமான் திருத்தம் ஆடின காலத்தில் அவரது திருக்கையிலிருந்த 'டங்கா' என்ற துடி ஒலி செய்ததாம். அவ்வொலியிலிருந்து

இருபத்தைந்து (25) எழுத்துக்கள் பிறந்தனவாம். அவ்வெழுத்துக்களே உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் காரணம் என்பர். அந்தச் சுலோகமாவது.

" நிருத்த வசானே நடராஜ ராஜோ
நநாத டங்காம் நவபஞ்ச வாரம்
உத்தர்த்துகாம சனகாதி சித்தான்
எதத் விமர்சோ சிவசூத்ர ஜாலம் "

பழுது பார்க்கப்படாமை : ஆகவே வடமொழி இலக்கியத்திற்குக் காரண முதலாயுள்ள பெயரில் விளங்கும் இத்திருக் கோயிலின் உள்ளே சென்ருல்—என்ன காண்கிறோம். நல்ல கருங்கல்லால் கட்டப்பட்ட சுற்றுலைகளையும் மண்டபங்களையும் கொண்டிருந்தும் வேண்டாத இடங்களில் அழகைக் கெடுக்கும் கோணற்றாண்கள் அங்கங்கே முட்டுகளாக நின்று ஆலயத்தின் சிறப்பைக் கெடுக்கக் காண்கின்றோம். ஊன்றிப் பார்க்கையில் அத்தூண்கள் பிளவுபட்ட விட்டங்களைக் கீழேவிட ஒட்டாமல் தடுத்து நிற்கின்றன என அறியலாம். தட்சிணாமூர்த்திக் கருகிலொன்றும் சுப்பிரமணியர் சன்னதிக்கெதிரில் குத்தலாக ஒன்றும் மற்ற தேவர்களையும் தேவதைகளையும் மறைக்கும் மற்றும் சிலவும் இந்த ஆலயத்தைக் கெடுத்துக்கொண்டு நிற்கின்றன. யாதோ ஒரு காரணத்தால் விட்டங்கள் உடைந்து விட்டன. வேறு விட்டங்கள்போட வகையின்றி முட்டுத்தூண்கள் நிறுத்தியிருக்கிறார்கள். பின் காலத்திலாவது திருப்பணி செய்ய நினைத்தார்களா ? இல்லவேயில்லை.

தென்னுட்டில் அபவாதங்கள் : இப்படிப்பட்ட காட்சிகள் இந்தக் கோயிலில் மட்டுமோ ? இதைப்போல நூற்றுக் கணக்கான, ஆயிரக் காணக்கான கோயில்களில் நிகழ்ந்திருப்பதை நாம் காண்கிறோம். ஆலயத்திற்குச் செல்லும் மக்கள் தினந்தோறும் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் இருந்த அலங்கோலங்களை நினைப்பதேயில்லை. திருவிழாக் காலங்களில் விழாக்களைக் காணச்செல்லும் ஆயிரக்கணக்கான மக்களும் இதனைப்பற்றிச் சிந்திப்பதேயில்லை. பக்தியுள்ள

வர்கள் பக்தியில் மட்டும் ஈடுபடுவார்கள். பாமரர்கள் விழா வினைக் கண்டு களித்து விட்டுச் செல்வார்கள். இறைவன் கோயில் நன்ருக இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் களுக்கு இல்லவேயில்லை. சமய நிலையங்களை வயிற்றுப் பாட்டுக்காக வைத்துக்கொண்டு பிழைப்பவர்கள் கட்டிட நிலையைப்பற்றி ஏன் அக்கறை கொள்கிருர்களோ ?

சிற்பப்பெருமை : ஆனல் நந்திகேசுவரர் ஆலயத்தை மேலும் பார்க்கத் தொடங்கின் மற்ருெரு பெருமை தோன் றும். நடராசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சபா மண்டபத்தைக் காணும்போது அங்கே தூண்களில் உள்ள திருவுருவங்கள் அன்பர்களுடைய நெஞ்சகங்களைக் கவருந் திறத்தன. வேலூர் சலகண்டேசுவரர், பேரூர் பட்டீசுவரர் மண்டபங்களிலுள்ள அருமையான சிற்பங்களை இங்கு காணு விட்டாலும் இரண்டு விலைமதிக்கவொணுத் திருவுருவங்கள் அச்சபையை அலங்கரிப்பதைக் காணலாம். பெருமானின் வலது பக்கத்தில் முருகக் கடவுள் மயில்மீது எழுந்தருளி யுள்ள காட்சி நெஞ்சையள்ளும் பெற்றிமையுடையது. இடது புறத்தில் வீற்றிருக்கும் திருவுருவம் கலைமகளின் அழகிய தோற்றம். பளபளப்பான கருஞ் சலவைக்கல்லில் கலைமகள் கையில் வீணைவாசித்துக்கொண்டு வீற்றிருக்கிருள். திரு முகம் வசீகரமானது. இருக்கும்நிலை மிக அழகியது. இத் திருவுருவத்தை ஏனே இங்கே சிற்பியமைத்தான்.

கலைமகள் திருவுருவம் : நடராசப் பெருமானின் திருக் கூத்துக்குக் கலைமகளா வீணை வாசிக்கிருள் ? இருக்கலாம் என்று சிற்பி நினைத்தான் போலும். அர்ச்சகரைக் கேட் டேன். அவர்கட்கு இந்தக் கேள்விக்கு விடை எவ்வாறு வரும் ? மௌனம் சாதித்தார். நாரதரல்லவோ பெருமான் திருக்கூடத்துக்கு யாழ் வாசிப்பவர் என்று வில்லி கூறுகிருர்.

“ மான்புரிந்த திருக்கரத்து மதியிருந்த நதிவேணி மங்கை பாகன்
தான்புரிந்த திருக்கூத்துக் கிசைய மகிழ்ந்திசை பாடும் தத்வஞானி ”

என்று நாரதரைப் பற்றியல்லவோ அந்நூலோர் கூறுகிருர். இந்தக் கோயிலிலே ஐதிகம் வேருய் இருப்பதன் காரணம்

என்ன ? காரணம் கிடக்கட்டும். கலைமகளுடைய திருவுருவம் எந்த வனப்பைக் கொண்டிருக்கிறது ? நமது பொது மக்கள் அறிகிறார்களா ? அறக்காப்பாளர்களே அறியாவிட்டால் பொது மக்கள் எவ்வாறு அறிவார்கள் ?

பழமலைச் சிறப்பு: துறையூர் நந்திகேசுவரப் பெருமான் கோயிலைப்போலவே எத்தனையோ கோயில்கள் பல அரிய பெருமைகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு முறை விருத்தாசலம் பழமலை நாதர் கோயிலுக்குச் சென்றேன். அங்கே அம்மன் கோயில் சுற்றுலையில் பெண்பால் நரசிங்கம் இருந்ததைக் கண்டு அதனைப்பற்றி விளக்கம் பெற ஒரு கட்டுரையும் நமது சித்தாந்தத்தில் எழுதியுள்ளோம். இதுவரை அதற்கு யாதொரு விடையும் வரவில்லை. பாடல் பெற்ற தலங்களில் மட்டும் நமது கவனம் இதுவரையில் மிகுதியாகச் சென்று கொண்டிருந்தது. ஆனால் பாடல் பெறாத வைப்புத்தலங்களிலும், புராணத் தலங்களிலும் கல்வெட்டுத் தலங்களிலும் கணக்கற்ற, அற்புதத் தோற்றங்கள் இருக்கின்றன. அவைகளை நன்கு தேர்ந்து பொதுமக்களுக்கு விளக்க வேண்டாமா ?

திருச்சிவட்டம் மற்ற கோயில்கள் : திருச்சி மாவட்டத்தில் வடபகுதி பெரும்பான்மையும் புன்செய் நிலப்பாங்கானது முல்லையும் குறிஞ்சியும் படர்ந்த பகுதியாகும். இங்கே கோவில்கள் சாதாரணமானவை. ஆகவே இங்கே அற்புதங்கள் இல்லையென்று எண்ணி அங்கு யாத்திரை செல்வதில்லை. திருப்பட்டூரில் (திருப்பிடவூர்) சாத்தனார் கோயிலும் ஊற்றத்தூர் முருகன் குன்றும் பார்த்து மகிழத்தக்கவை. வெங்கலூர் (வெங்கை) பழமலைநாதர் கோயில் சிவப்பிரகாசரால் புகழ்ப்பெற்றது. " வெற்றியாகிய முத்தி தந்தருள் வெங்கை மாநகர் " என்றல்லவோ அவர் புகழ்ந்திருக்கிறார். அங்கே கருணைப் பிரகாசர் சமாதி என்ன நிலையில் இருக்கிறது ? யார் காண்கிறார்கள். இதைப்போல பல கேள்விகளையும் யாம் கேட்டுப் பெருமிதம் அடைவது எப்போது ? ஆராயுங்கள் ?

பாவனையின் பயனே பக்தியின் விளைவு

மா. ப. தியாகன்

"யத்பாவோ தத்பவதி"; "As you think so you become" "எண்ணியது எண்ணியாங் கெய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்" "மனம்போல மாங்கல்யம்" என வடமொழியிலும் தமிழ் மறையிலும் தமிழ் ஆங்கிலப் பழமொழிகளிலும் கூறக்காண்கிறோம். எனினும் நாம் நாள் முழுதும் பாவிப்பது பத்திரிகைகளில் காணும் செய்திகளும், சுவர்களில் கண்கவரும்படி காட்சி அளிக்கும் சல்லாபப் படங்களும், இங்கு வண்டி கவிழ்ந்தது, அங்கு கொள்ளை போயிற்று, இங்கு கொலை நடந்ததெனும் செய்திகளும், இன்னோரன்ன பிற விபத்துகளும் ஆபத்துகளுமேயாம். ஐம்புலனாகிய கடாக்கள் மனக் கொட்டகையில் இவ்வாறான சாணம் கோமயம் முதலிய குப்பைகளையும் மலங்களையும் சேமித்து அசுத்தப்படுத்துகின்றன. பட்டினத்தடிகள் இதே கருத்தைத் திருக்கழுமல மும்மணிக் கோவையில் பின் வருமாறு கூறுகிறார்கள்.

"கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாங் - காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுந் தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை - யரிதினிகழ்ந்து போக்கிப் பொரு திறன் மையிருணிறத்து மதனுடையடு சினத்தைவகைக் கடாவும் யாப்பவிழ்த்தகற்றி – யன்புகொடு மெழுகி யருள் விளக்கேற்றித் – துன்பவிருளைத் துரந்து முன்புற மெய் யெனும் விதானம் விரித்து நொய்ய – கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப் – பாழறையுனக்குப் பள்ளியறை யாக்கிச் சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு – எந்தை இருக்கஇட்டனன்"

அப்படி மனத்தை அன்புகொடு மெழுகுவதற்கு நல்ல உணர்ச்சிகளைத் தருவதற்காக ஏற்பட்டுள்ள திருக்கோயில்களுக்குச் சென்று ஆங்கு எழுந்தருளிய மூர்த்தியினை "நன்றுடையான் தீயதிலான் நரைவெள்ளேறுடையான்" என்றெல்லாம் பாவித்து, அலங்காரங்களென்ன, மங்கள கோஷங்களென்ன அடியார்கள் கூட்டமென்ன, இன்னிசை பாராயணங்களென்ன நல்ல நைவேத்தியங்களென்ன இப்படி

யாக ஐம்புலன்களுக்கும் ஊட்டவல்ல உபாயங்களைப் பயன் படுத்திக்கொண்டு வருவதே மனமாசுகளைக் களைந்தெறியும் வழியாகும். ஆலயவழிபாட்டில் நல்லுணர்ச்சியைப் பெறு வதைவிட்டு ஆலயமூர்த்தியை ஒரு குறியென்றோ அல்லது அடையாளமென்றோ கொள்வோமேயானால் அது நமக்கு அவ்வாறே பயனளிக்கும். அது சிற்பியினால் செய்யப்பட்ட கல்லென்று பாவித்தால் அப்படியான பலனைத்தான் நாம் பெறமுடியும். கண்ணப்பர் காளத்தி மலையிலே அதே கற் சிலையை எவ்வாறு கண்டார்கள் ?

விறகிற்றீயினன் போலவும், பாலிற்படு நெய்போலவும் மாமணிச் சோதிபோலவும் கண்டார். உணர்வுக் கயிற்றினால் கடைந்தார். அவ்வுருவம் தனித்திருந்தமைக்குப் பதைத்தார். உண்டி கொடுப்பாரின்றி அவ்வுருவம் இளைத்திருப்பதுபோல் கண்டார். அப்பசியை நீக்க இறைச்சியை அமுது செய்து படைத்தார். வாய் கலசமாக நீர் கொணர்ந்து அர்ச்சித்தார். அவருடைய அன்பின் செயல்களுக்கு அக் கல்லுருவமாய காளத்தியப்பன் கசிந்து உதிரக்கண்ணீர் உகுத்தனர். கல்லும் கனிந்ததல்லவா ? அதைத் தடுக்க ஊனக் கண்ணையப்பினர். "அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்" அதைத் தடுக்க மற்றொரு கண்ணில் உதிரக் கண்ணீர் பெருகிற்று. அதையும் மற்றொரு கண்ணால் தடுக்க முயன்றார். அதனால் நின்று விடுமோ அவ்வன்பின் பெருக்கம் ? அவ்வன்பு அருளுருவாய் கற்சிலையினின்று வெளிப்பட்டு "நில்லு கண்ணப்பா" என்று அலறியது. அலறி அவரை ஆட்கொண்டது. அவ்வாறு ஆறு நாளில் சிவனருள் கற்சிலையினின்றும் கடைந்தெடுக்கப்பட்டது கண்ணப்பர் கொண்ட பாவனையின் திண்மையன்றோ ? கண்ணப்பருடைய நெஞ்சம் எவ்வாறு பதைத்தது. "வேனில் வேள் மலர்க்கணைக்கும் வெள்நகைச் செவ்வாய்ப் பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் மக்களுடைய பாழ்நெஞ்சம்" போன்றல்லவோ, பதைத்தது. ஒவ்வொருவருக்கும் அப் பதைப்புறல் அனுபவம் உண்டு. அதை ஆண்டவன்பால் செலுத்தினால் அதுவே பக்திநிலையாகும். மாதர்பால் எழும் எழுச்சி பல ஜன்மப் பழக்கத்தால் வந்ததன்றோ ? அதே

போல் இறைவன்பால் அன்பாகிய எழுச்சி எழவேண்டு மானால் நாம் நல்லமுறையில் பாவிக்கப் பழகுதல் வேண்டாவோ? "பழக நான் அடிமை செய்வேன் பசுபதி பாவ நாசா" என்று அப்பர் கூறவில்லையா? "பார்த்த இடமெல்லாம் பரமன்காண்" என்று சான்றோர் கூறுவதின் பொருளென்ன?

ஒரு மரத்தைப் பார்க்கிறோம். அது சிவலிங்கமாகவா நமக்குத் தோற்றமளிக்கும். அவ்வாறு வேற்றுருவமாகக் காண்பதையா அவர் கூறுகிறார்கள்? அல்ல. அது மழை வெய்யில் இலையுதிர்காலம், இளவேனிற்காலம் எல்லாக் காலங்களிலும் தளர்வின்றி நிற்றல்போல, நாம் வினைவழி வரும் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாது இறைவனுடைய இல்லமே நமது சொந்த இடமென எண்ணுவதே யாகும். இறைவனைச் சார்ந்திருக்கிறோம் என்று உறுதி கொள்ளல் வேண்டும். திருக்குளத்தைத் திருவண்ணாமலையில் கண்ட மாணிக்கவாசகருக்கு அது என்ன தோற்றமளித்தது? "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடு" என்று அவர் திருவெம்பாவையில் பாடுகிறார்கள். நாம் குளத்தைக் கண்டவுடன் கோயிலதிகாரிகள் அதைச் சரிவரப் பாதுகாப்பதில்லையென்றும் அங்கு மக்கள் செய்யும் அசுத்தங்களையுமே காண்கிறோம். ஆக எதையும் காணும் பொழுது நல்ல பாவனையுடன் காணவேண்டும். முக்கியமாக ஆலயங்களுக்குச் செல்லும்போது ஆலய மூர்த்திகளை ஒரு குருவைச் சென்று வணங்குதல்போல் வணங்கவேண்டும். ஆலய தத்துவங்களை மனதிற்கொண்டு பிராகாரங்கள், துவஜ ஸ்தம்பம், பலிபீடம், திருநந்திதேவர், தூபி இவைகளைக் காணும்போது அந்த அந்தத் தத்துவங்களை மனதிற் பாவித்து வழிபடல் வேண்டும். இவ்வாறாக தினம் பழகுதல் வேண்டும். "நிலைபெறுமா றெண்ணுதியே நெஞ்சே நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப் புலர்வதன்முன் அலகிட்டு மெழுகு மிட்டுப் பூமாலை புனைந்தேத்தி" வழிபடவேண்டும் என்று அப்பர் சுவாமிகள் கூறும் உபதேசமொழிகளை மனதிற் கொள்வாம்.

மெய்கண்டார்*

இச் சிறந்த உலகத்தில், உயர்ந்த மக்கட் பிறப் பெய்திய நமக்கு விருப்பு வெறுப்பு எனும் இரண்டு முண்டு. நாம் விரும்புவதெல்லாம் நன்மையைப் பெறவேண்டு மென் பதற்கே. அப்படி விரும்பப்படும் பொருள்கள் பல உள. முயற்சி செய்தால் அவற்றைப் பெறலாம். முயற்சி செய் வதற்கு மனம், வாய், உடல் ஆகிய மூன்று கருவிகள் நம் மிடத்துள்ளன. அவற்றில் மனமே சிறந்தது. மனம் ஒரு கருவி. நாம் அதை உடையோம். கருவி உடையானுடைய ஏவற்படி நடக்கவேண்டியதாயிருக்க, நம் மனம் நம் ஏவற் படி கேட்கிறதில்லை. அதற்கு மாருக மனத்தின் வழியே நாம் செல்லுகின்றேம். அதனுல் நாம் உடையார் என்ற நிலையும், மனம் நமது உடைமைப் பொருள் என்ற நிலையும் போய்விடுகிறது. உடைமைப் பொருளாகிய மனத்தை நம் ஏவற்படி நடத்தும் நிலை நமக்கு வரவில்லை. அந்நிலையைச் சம்பந்தர், நாவுக்கரசர் முதலிய பெரியோர்கள் அடைந் திருந்தனர்.

" தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்த நிலையாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னேடும் போதுகண் டாயே "

என்று திருமூலர், தம் ஏவற்படி நடவாததினுல் இடர்ப் பட்ட மனதைப் பார்த்து இரக்கங்கொண்டு அது நன்மை யடைதற்குத் தான் போமிடத்து வரும்படி அழைக்கிருர். தன் மனதை அவர் எங்கு அழைக்கின்ருர் என்று வினவின்,

" அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிலர்தத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே "

---

*1937-ஆம் ஆண்டில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். கச்சி - முனிசாமி உடையார் குறிப்பெடுத்தது.

என்ற பாட்டில் பேரின்பத்தைக் காட்டுவிக்க வல்ல பெரியாரிடத்தில் சேரத் தன் மனதை அழைக்கின்றார் என்பது விளங்குகின்றது. எனவே, நாம் நன்மையைப் பெறவேண்டின் நம் மனதைப் பெரியாரிடத்தில் செலுத்தல் வேண்டும். பெரியார் மிகுந்த அறிவுடையார்.

" அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்."

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

என்ற திருக்குறட் பாக்களால் பெரியவர்கள் மிகுந்த அறிவுடையவர்கள் என்பதும், பொருளற்றவற்றைப் பொருளாக மதியாது மெய்ப்பொருளைக் காண்பதே சிறந்த அறிவென்பதும் விளங்குகின்றன. மெய்ப்பொருளைக் கண்டவர்கள் யாரோ அவர்கள் தான் பெரியவர்கள். இதனால் மெய்கண்டாருடைய பெருமை விளங்குகின்றது.

இறைவன் அருளிய வேதத்தில் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உதவும்படி சிறிய பொருள்களும் பெரிய பொருள்களும் பேசப்பட்டிருக்கின்றன. சிறிய பொருள்கள் தள்ளததக்கன. பெரிய பொருள்கள் கொள்ளத்தக்கன. இவ்வேதத்தில் அருமையாகப் பேசப்படுகின்ற பொருள் எதுவோ அதுவே குருவாகத் தோன்றி நந்திக்கு அருள, அந்நந்தி வழியில் வந்தது சிவஞான போதமாகும். அதை இயற்றியவர்தான் மெய்கண்டார். அவர் அந்நூலை நம் தாய்மொழியாகிய தமிழில் வழங்கினார்; வழங்கினதோடு நில்லாமல் அதை மற்றவர்கள் அறியும்படியும் உணர்த்தி, அதன் பயனாக அஞ்ஞானத்தைப் போக்கும்படிச் செய்தவர்.

சிவஞான போதத்தை மெய்கண்டார் சூத்திர ரூபமாக அருளினார். அருகிய எழுத்துக்களினால் பெருகிய பொருளை அறிவிப்பன சூத்திரங்கள். தமிழில் சூத்திர ரூபமாக உள்ள நூல்கள் வெகுசில. அவைகளும் இலக்கண நூல்கள். அறிவு நூல்களில் சூத்திர ரூபமாக உள்ளது சிவஞான போதமொன்றே.

" சிறிய அடியில் பெரிய மால்வரைப் பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிவெலாம் அகத் தடக்கியதோர்
நெறியின் நீடிய நிகழ் சிவஞான போதத்தைக்
குறிய தீந்தமிழால் உரை குரவனைப் பணிவாம் "

என்ற செய்யுளால் இவ்வுண்மை பெறப்படுகின்றது.

மெய்கண்டார் காலத்திலேயே இருந்த அருணந்தி சிவாச்சாரியார், தாம் இயற்றிய இருபா இருபஃதில்,

" மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்
வெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் "

" கண்ணகல் ஞாலத்துக் கதிரவன் தானென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ "

" காரா கிருகக் கலியாழ் வேனைநின்
பேரா இன்பத் திருத்திய பெரும "

என்றமையால் ' மெய்கண்டதேவர் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுடைய மலத்தை அகற்றுகின்றவர், தன்னை எதிர்ப்பட்டாருடைய அஞ்ஞானத்தைக் கதிரவன் தோன்றி இருளை ஒழிப்பதுபோல் போக்குகின்றவர், மேலும் எதிர்ப் படாதவர்களுக்கும் அழியாத இன்பத்தைத் தருகின்றவர் ' என்ற உண்மைகள் விளங்குகின்றன. மனவாசகங் கடந் தார் தாம் இயற்றிய உண்மை விளக்கத்தில்,

" பொய்காட்டிப் பொய்அகற்றிப் போதானந்தப் பொருளாம்
மெய் காட்டும் மெய்கண்டாய் "

என்றபடியால் மெய்கண்டதேவர் தம்மை அடைந்தோர்க் குத் தேகாதி பிரபஞ்சம் யாவும் பொய் என்பதைக் காட்டி, அதனுல் அப் பொய் அறிவைப் போக்கி மெய்ஞ்ஞானத் தைத் தருகின்றவர் என்பதையும்,

" வித்தக மெய்கண்ட தேவர் "

என்றபடியால் அவர் நிறைந்த ஞானத்தை யுடையவர் என் பதையும் விளக்கிக் காட்டினுர். மேற்கூறியவாற்ருல் மெய் கண்டாருடைய பெருமை விளங்கிற்று.

மெய்கண்ட தேவர் இருந்த காலத்தைப் பற்றிச் சற்ருராய்ந்து அவர் வரலாற்றில் செல்லல் இக்கால மரபின்

படி அவசியமாகும். மெய்கண்டாருடைய மாணவர் அருணந்தி சிவாச்சாரியார், அவருடைய மாணவர் மறைஞான சம்பந்தர், அவருடைய மாணவர் உமாபதி சிவாச்சாரியார். உமாபதி சிவாச்சாரியார் சாலிவாகன சகாப்தம் 1235-ல் இருந்தவர் என்பது அவர் இயற்றிய சங்கற்ப நிராகரணம் என்ற நூலால் தெரிகிறது. இப்போது நடப்பது சாலிவாகன சகாப்தம் 1859 (கி. பி. 1937) ஆகவே உமாபதி சிவம் இற்றைக்கு 654 ஆண்டுகட்கு முன் இருந்தவராவர். இவருக்குக் குரு பரம்பரையில் மூன்றுவதாக இருந்த மெய்கண்டாருடைய காலம் இற்றைக்கு 685 அல்லது 690 ஆண்டுகட்கு முன்னராம் என முடிவு கட்டலாம்.

நடு நாட்டிலே திருப் பெண்ணாகடம் என்ற ஊரில் அச்சுதகளப்பாளர் என்ற வேளாளர் பிள்ளைப்பேறின்மையால் பல தவங்கள் செய்தும் பலனற்றனவாகிவிடத் தம் குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று குறையிரந்து நிற்க, அவர் தமிழ்மறையாகிய தேவாரத்தில் கயிறு சாத்திப் பார்க்க,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே"

என்ற திருஞான சம்பந்தர் தேவாரம் கிடைத்தது. இப்பாட்டின் கருத்தைக் குருவானவர் விளக்கிக் காட்ட அவராணையைச் சிரமேற்கொண்டு அச்சுதகளப்பாளர் தம் மனைவியுடன் திருவெண்காடடைந்து முக்குள நீராடிச் சிவபெருமானை வழிபடுவாராயினர். அவ்வழிபாட்டின் பயனாய் அவதரித்த பிள்ளைக்கு அவர்கள், அத்தலத்து இறைவன் பெயராகிய சுவேதவனப் பெருமாள் என்ற பெயரையே பிள்ளைத் திருநாமமாகச் சூட்டினர். பிள்ளை, திருவெண்ணெய்நல்லூரில் அம்மான் வீட்டில் வளர்ந்து வருங் காலத்தில் வயது மூன்றாயிற்று. அக்காலத்தில் ஒரு நாள் பரஞ்சோதி முனிவர் ஆகாய வழியாய்ச் செல்லும் போது, செலவு தடைப்பட்டமை கண்டு கீழிறங்கிச் சுவேதவனப் பெருமாளின் பக்குவத்தை யறிந்து மெய்ஞ்

ஞானத்தை உபதேசித்துக் குழந்தைக்கு மெய்கண்டார் என்னுந் திருநாமத்தையும் சூட்டிச் சென்றனர். மெய்கண் டார் தாம் உபதேச மூலமடைந்த பொருளைப் பொல்லாப் பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து தம்முடைய சீடர்களுக்குமுபதேசித்துச் சிவஞானபோதம் என்றொரு நூலையும் செய்தருளினர்.

சிவஞானபோதம் ஓர் அருஞ் செந்தமிழ் நூல். "உயர் சிவஞான போத" மென்றும், "யாரும் வெல்லாத சிவஞான போத" மென்றும் அதைத் தக்கோர் மதித்துள் ளார். சிவஞான போதம் என்ற சொற்றொடர் சிவம், ஞானம், போதம் என்னும் முச்சொற்களால் ஆக்கப்பட்டு இறைவன் அருளால் வரும் அனுபூதி ஞானம் அல்லது பரஞானத்தின் வேறாய நூலாராய்ச்சியால் உண்டாம் ஆராய்ச்சி ஞானம் அல்லது அபர ஞானத்தை உணர்த்தும் நூல் எனும் பொருளைத் தருகின்றது. திருவாதவூரரை ஆட் கொள்ள இறைவன் மானுடச்சட்டை தாங்கி ஒரு சிவ யோகி வேடம் பூண்டு திருப்பெருந்துறையில் வீற்றிருந்த போது அவர் கையிலிருந்த சுவடி யாதென்று வாதவூரர் கேட்கப் "பொய்ம்மையிலாச் சிவஞான போதம்" என்று இறைவன் அருள, "சிவம் எது? ஞானம் எது? போதம் எது?" என்ற மாணிக்கவாசகர் கேள்விக்கு "நின்ற சிவம் ஒன்று, அதனைத் தேர்தல் ஞானம், ஆராய்ந்து தெளிதல் போதம்" என்று சிவபெருமான் "சிவஞான போதம்" என்ற சொற்றொடருக்கு உரை கூறினர்.

சிவஞான போதத்தில் விளக்கப்படுவது வேதத்தில் சொல்லப்படும் ஆறு முடிவுகளில் ஒன்றாகிய சித்தாந்தமாம்.

"வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போ தாந்தமும்
ஓதத்தகு மெட்டி யோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே"

என்ற திருமந்திரப் பாட்டு ஆறுவித அந்தங்களை உணர்த்து கின்றது. இதில் சித்தாந்தத்திற்கு அடையாக "மிக்க" என்ற பிரயோகம் நோக்கற்பாலது.

"நித்தம் பரனோ டுயிருற்று நீள்மனஞ்
சத்தமுதல் ஐந்துந் தத்துவத்தால் நீங்கிச்

சுத்த மசுத்தந் தொடராவகை நினைத்
தத்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே "

என்ற செய்யுளால் சித்தாந்த மெதுவென்பது விளங்கு கின்றது. சித்தாந்தமென்ற சொல்லுக்கு முடிந்த முடிவு என்பது பொருள். வேதம், உபநிஷத் இவைகளில் கூறப் படும் முடிவான பொருள் சித்தாந்தமாம். இதைப் பின் பற்றி ஒழுகுதலின் பயனை,

" சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டுஞ் சிவனையே "

என்ற திருமந்திரச் செய்யுள் ஓதுகின்றது. மேற்கூறியவாற் றால் நவமான வேதத்தின் முடிவு ஞான சித்தாந்தமாகு மென்பதும், உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதற்கு அதுவே ஒப்பற்ற நெறியாகு மென்பதும் பெற்றாம்.

ஆகமங்களும் புராணங்களும் சித்தாந்தத்தையே வற் புறுத்துகின்றன. உபநிஷத்தின் முடிவு சித்தாந்தம். அது வைதீகம், அவைதிகமன்று என்று மகுடாகமமும், சித்தாந் தம் வேதத்தின் சாரம் என்று சுப்ரபேதாகமும், சுருதி சாரம் சித்தாந்தம் என்று வாயுசம்ஹிதையும், ஆகமங்களில் முடிவாகச் சொல்லப்பட்ட பதி, பசு, பாசம் என்ற இரகசியமான பொருளாகிய சித்தாந்தத்தைத் தட்சிணா மூர்த்தி சனகாதி முனிவர்களுக்குச் சொன்னார் என்று வடமொழி ஸ்காந்தமும் கூறுகின்றன. உமாபதிசிவம் சித்தாந்தத்தை " வேதத் தலைதரு பொருள் " என்றார். குமர குருபர சுவாமிகளும் சித்தாந்தத்தையே போற்றினார்.

வேதாகமங்களிலும் புராணங்களிலும் வடமொழிப் புலவர்களாலும் தென்மொழிப் புலவர்களாலும் விதந் தோதப்பட்ட சைவ சித்தாந்தத்தை விளக்கவந்த சிவஞான போதம் பொது, உண்மை என்றிரண்டு அதிகாரங்களால் அமைக்கப்பட்டது. பொதுவதிகாரம் பதிபசு பாசங்களின் பொது இலக்கணத்தையும், உண்மையதிகாரம் அவற்றின் சிறப்பிலக்கணத்தையும் சாற்றுகின்றன. பொது இலக் கணம் தடத்த இலட்சணம் என்றும் சிறப்பிலக்கணம்

சொரூப இலட்சணம் என்றும் சொல்லப்படும். ஒரு பொருள் மற்றொன்றோடு கலந்துள்ள இலட்சணம் தடத்த மாம். வேறொன்றோடு கூடாதபோதுள்ள இலட்சணம் சொரூபமாம். பொது அதிகாரத்தில் முப்பொருள் உண்மை சொல்லப்படுகிறது. ஒரு பொருளைப் பிரமாணத்தாலும் இலட்சணத்தாலும் தெரிந்துகொள்ளலாம். பிரமாணம் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என மூவகைத்து. பிரத்தியட்சம் புறப்புறச் சமயத்தாராகிய உலோகாய தருக்கே உரியதாதலால் அது சிறந்த பிரமாணமன்று. ஆகமப் பிரமாணம் மற்ற சமயத்தாருக்குந் தவிர சைவத் தில் மந்த அறிவுடையோர்களுக்கும் பொருந்தாது. எல்லா ராலும் கொள்ளக்கூடியது அனுமானப் பிரமாணமாகும். அனுமானத்தால் கண்டதைக் கொண்டு காணாதது நிச்சயிக் கப்படும். பொதுவதிகாரம் பிரமாண இயல், இலக்கண இயல் என்றிரண்டியல்களை உடைத்தாய்ப் பிரமாண இயல் மூன்று சூத்திரங்களால் கடவுள், உலகம், உயிராகிய முப் பொருள்களின் உண்மையை விளக்கி, இலக்கண இயல் மூன்று சூத்திரங்களால் உயிரின் இலக்கணம், உலகத்தின் இலக்கணம், கடவுளின் இலக்கணம் ஆகியவற்றைக் கூறு கின்றது. உண்மை அதிகாரம் சாதனம், பயன் எனு மிரண்டியல்களாலாகி, முதலியற்கண் மூன்று சூத்திரங் களால் சாதனம் செய்யுமதிகாரி, சாதனம் செய்யப்படும் பொருள், சாதனம் செய்யு முறை இவற்றை விளக்கி, இரண்டாவதியல் மூன்று சூத்திரங்களால் பாச விடுதி, ஈசனையடைதல், சிவன் முத்தர் இலக்கணம் ஆகியவற்றைப் பேசுகிறது.

இந்நூல் அமைப்புக்கும் நூற்கலப்புக்கும் ஓர் இயை புண்டு.

"கல்லால் நிழல்மலை—வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்—நல்லார் புனைவரே"

என்பது நூற்காப்பு. இக்காப்பு பன்னிரண்டு பதங்களா லாய நான்கடிகளையுடைய ஒரு செய்யுள். நூல் பன்னி ரண்டு சூத்திரங்களாலாய நான்கியல்களையுடைத் தென்ப தைக் காப்புச் செய்யுள் உணர்த்துகின்றது. முதலடியின் கடைச் சொல்லாகிய "மலைவு" என்பது "மலைவில்லார்"

என்று புணர்ச்சியால் சம்பந்தப்படுவது, நூலின் முதலியலின் கடையும் இரண்டாவதியலின் முதலும் சம்பந்தப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. முதலியலின் கடைச் சூத்திரமும் இரண்டாவதியலின் முதற் சூத்திரமும் பசுவைப் பற்றியே பேசுகின்றன.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் எனும் நான்கு சாதனங்களுள் கேட்டலும் சிந்தித்தலும் பொது அதிகாரத்தில் ஆறு சூத்திரங்களாலும், தெளிதலும் நிட்டை கூடலும் உண்மையதிகாரத்தில் ஆறு சூத்திரங்களாலும் விளக்கப்படுகின்றன. எனவே, பொது அதிகாரம் விஷயங்களை ஆராய்கின்றவர்களுக்குரிய தென்பதும், இரண்டதிகாரங்களும் சாதன முடையார்க்குரிய தென்பதும் பெற்றும்.

இந்நூல் தமிழில் வழங்கப்பட்டதாதலால் தமிழ்நாடு இது வழங்கப்படுமெல்லையாகும். ஆனல் இஃது இக்காலத்துப் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பல தேசங்களிலும் பரவப் பெற்றிருத்தலால், இந்நூற்கு வழங்கு மெல்லை கோலல் அரிது.

வேதாகமங்கள் பொருள்களை ஓரிடத்திற் சொல்வது போல் மற்றோரிடத்தில் சொல்வதில்லை. அவைகளை ஆய்ந்து ஒற்றுமை செய்து காட்டவே சிவஞான போதம் தோன்றிற்று. பொருள்களெல்லாம் மூன்று பிரிவுகளில் அடங்கும். அவை உலகம், உயிர், கடவுள் என்பனவாம். ஆனல் பல நூல்கள் பல திறமாக அவற்றைக் கூறுகின்றன. சுவாயம்புயம் என்னுமாகமம் சிவம், பதி, பசு, கர்மம், ஆணவம், சுத்த மாயை, அசுத்த மாயை எனப் பொருள்களை ஏழாகவும், பௌட்கரம் சிவத்தை ஒழித்து ஆறாகவும், பராக்யேயம் பதி, பாசம், ஆணவம், கர்மம், மாயை, என ஐந்தாகவும், சர்வஞ்ஞானேத்தரம் சிவம், பதி, பாசம், பசு என நான்காகவும், இரௌத்ரவம், மிருகேந்திரம் ஆகிய ஆகமங்கள் பதி, பசு, பாசம் என மூன்றாகவும் கூறுகின்றன. இவ்வாகமங்கள் அனைத்தும் ஒரே கருத்துடையனவா யிருப்பினும் பொருள்களைப் பலதிறப்படுத்திக் கூறினமையின் அவற்றை ஒற்றுமைப்படுத்திக் காட்டச் சிவஞான போதம் தோன்றிற்று.

நிலையில்லாத பொருள்களின் சம்பந்தமான பிற விக்கு அஞ்சி நிலைத்த பொருள்களின் சம்பந்தமான இன் பத்தை நுகர விரும்புவோரே இந்நூல் கேட்க அதிகாரி யாவர். சரியை, கிரியை, யோக நூல்களைக் கற்ற பிறகு இந்நூலைக் கற்றால் நூற்பொருள் நன்கு விளங்கும். அன் றேல், விபரீதமாகுமென்பது பெரியார் துணிபு. இதைக் கற்றலினால் அறியாமை நீங்க ஆராய்ச்சி ஞானம் உண் டாகும்.

இனிச் சிவஞான போதம் நிலைநாட்டுவது சுத்தாத்து விதத்தை.

"பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ"

என்னும் தாயுமானார் பாடல் இங்குக் குறிக்கத் தக்கது. சுத்தாத்துவிதம் என்று கூறற்குக் காரணம் சிவாத்வைதம், விசிட்டாத்வைதம், கேவலாத்வைதம் என்பவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டற்காம். அத்வைதம் எனும் வட மொழிச் சொல் ந + துவைதம் எனப் பிரிக்கப்படும். 'ந' என்ற சப்தத்திற்கு "சப்தகல்பத்ருமம்" எனும் வடமொழி நூல் ஆறுவிதப் பொருள்களைக் கூறுகிறது. ஈண்டு வேண்டற் பாலன மூன்று பொருள்கள். அவை அன்மை, இன்மை, மறுதலையாகும். பிராமண குலத்திற் பிறந்தும் பிறப் பொழுக்கத்தினின்றும் தவறினானை அப்பிராமணன் என்று கூறுமிடத்து 'ந' என்னும் சொல் அன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அப்பிரகாசம், அமலம் என்றவிடத்து அது இன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அநீதி, அதர்மம் என்றவிடத்து அது மறுதலைப் பொருளில் வழங் கப்படுகிறது. ஆதிசங்கரர் அதை இன்மைப் பொருளில் கொண்டார். மத்வர்கள் மறுதலைப் பொருளில் கொள்கின் றனர். மெய்கண்டார் அன்மைப் பொருளில் வழங்கு கின்றார். கடவுளுக்கும் உயிருக்குமுள்ள அத்வைத சம்பந் தத்தை மெய்கண்டார் விளக்கும் முறையே சிறந்த தொன் றாகும்.

இரண்டு பொருள்களின் சம்பந்தம் ஐக்கியம், தாதாத் மியம், சமவாயம், சையோகம் எனப் பலவகைப்படும். ஆற்று நீர் கடல் நீரோடு கலத்தல் ஐக்கியமாம். கடவுளும்

உயிரும் சம்பந்தப்படுவது இதைப்போல் அன்று. "என்றுந் தெய்வம் தெய்வமே" என்றபடியால் உயிர் கடவுளோடு கூடிக் கடவுளாகாது. ஒரு மலரின் நிறம் அம்மலர் வடிவமாயிருத்தல் தாதான்மியமாம். இது குணகுணி சம்பந்தமாகும். அதாவது குணியின் ரூபமாய்க் குணம் இருத்தல். உயிர் கடவுளின் குணமல்லவாதலாலும், உயிர் ஒரு குணி, கடவுள் ஒரு குணியாதலாலும், குணியும் குணியும் கூடுதல் தாதான்மியம் அல்லவாதலாலும், கடவுளும் உயிரும் சம்பந்தப்படுவது தாதான்மியமன்று. இதையே தார்க்கிகர்கள் சமவாய சம்பந்தமென்பர். சையோகமாவது விரலும் விரலும் கூடுதலாம். ஈண்டு விரல் முழுமையுங் கூடுதலில்லை. கடவுளும் உயிரும் சம்பந்தப்படுதல் இதுவெனின், பூரண வியாபகமுடைய கடவுள் தன்மைக்குக் குறையேற்படுமாதலின் அது சையோகமன்று. உயிர் ஏகதேச வியாபகமுடையதாதலின் அகண்டத்தில் கடவுளோடு முழுமையுங் கூடாது. இனி மெய்கண்டார் கூறும் அத்துவிதம் யாதென்பதாராய்வாம். முற்கூறிய தாதான்மிய சம்பந்தம் இருவகைப்படும். சூரியனும் கிரணமும்போல் ஒரே பொருள் குணியாகவும் குணமாகவுமிருந்து இரண்டாய் நிற்றற்கு ஏதுவாயிருப்பதொன்று. ஈண்டு பிற பொருள்களைப் பார்க்கச் சூரிய கிரணம் இன்றியமையாதெனினும் சூரியனைப் பார்கக அவனே துணையாயிருப்பதை அறிகிறோம். வேறுபட்ட இரண்டு பொருள்கள் ஒன்றுகூடி இரண்டல்லாத் தன்மையை எய்தல் மற்றொருவித தாதான்மியமாம். தாள் தலை என்ற இரண்டு வேறுபட்ட சொற்கள் புணரும்போது தாடலை என்றாகிறது. இங்கு டகரம் ஒரு எழுத்தன்று. இரண்டு எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து ஒன்றாகாமலும் இரண்டுமல்லாமலும் நிற்கிறது. இதைப்போல் கடவுள், உயிர் ஆகிய இரண்டு வேறுபட்ட பொருள்கள் ஒன்று கூடும்போது ஒன்றாகாததும் இரண்டல்லாமையுமாகிய நிலையை எய்துகின்றன. இதுவே மெய்கண்டார் கூறும் அத்துவிதமாம்.

மேலும், பாணினி வியாகரணத்திற்கு உரை செய்த பதஞ்சலியார் அகரத்தை அன்மைப் பொருளிலேயே எடுத்தாளுகிறார். துவைதம், அத்வைதம் என்பன எண்ணுப் பெயர்ச்சொற்கள். வடமொழியில் 'அ' என்பது ஒன்று

இரண்டு என்னும் எண்களின்மேல் தவிர மற்ற எண்ணுப் பெயர்கள்மேல் வாராது. (அ+ஏகம்=அநேகம்; அ+துவைதம்=அத்வைதம்) ஒன்று என்பதை உணர்த்த ஏகம் என்ற சொல் இருக்க, இரண்டன்மையை உணர்த்தும் அத்வைதம் என்ற சொல்லை உபயோகிப்பதே கடவுளும் உயிரும் ஒன்றுமல்ல இரண்டுமல்ல என்ற சித்தாந்த உண்மைக்குச் சான்ருகும். ஆனல் ஒன்றே என்று மறைகள் கூறுவது முற்றறிவுடைய பதியை. சிற்றறிவுடைய உயிர்கள் பாசத்தோடு கூடினமையின் கடவுள் ஆகா. உலகமோ அறிவற்றது. ஆயின் கடவுள் இல்லையேல் ஒன்றுமில்லை என்பது அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்ரும் என்பது போலாம். அகரம் மற்ற உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் இயக்குவதுபோல் கடவுள் அடிமைகளாகிய உயிர்களையும் உடைமையாகிய உலகத்தையும் இயக்குகிருர். கடவுள் இன்றேல் உயிரும் உலகமும் இயங்கா.

முதற் சூத்திரத்தில், காணப்படும் உலகைக்கொண்டு, காணப்படாத கடவுளை நிச்சயித்து, இவ்வுலகம் அவன் அவள் அது எனும் மூவகைப் பாகுபாடுடையதாய், தோன்றல், இருத்தல், அழிதல் ஆகிய முத்தொழிலுடையதாய், தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாயிருந்த கடவுளினின்றும் தோன்றுகிறது என்று கூறி, இரண்டாஞ் சூத்திர முதல் அதிகரணத்தில் உலகத்தைத் தோற்றுவிக்குங்கால் கடவுள் உயிர்களோடு கூடி ஒன்ருயும், இரண்டாயும், ஒன்றிரண்டாயும் இருக்குந் தன்மையை ஆசிரியர் விளக்குகின்ருர். உயிரைப் பற்றியுள்ள மும்மலங்களில் ஆணவ மலம் பரிபாகமாதற் பொருட்டு சிருட்டியும், கர்மமலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுக்கமும், மாயாமலம் பரிபாகமாதற் பொருட்டு இரட்சணையும் ஆகிய முத்தொழிலைக் கடவுள் புரிகிருர். இச் செயல்களைப் புரியும்போது அவர் பதியாகின்ருர். இது கடவுளின் தடத்த லட்சணம் அல்லது பொது இயல்பெனப்படும். இத் தொழில்களைச் செய்யும் போது கடவுள் உயிருடன் கூடி நிற்கின்ருர். அப்படிக் கூடி நிற்கின்ற நிலை மூன்று விதப்படும். அவை அபேதம், பேதம், பேதாபேதம் என்பனவாம். உயிரும் உடம்பும் கூடியிருக்கும் நிலை அவ்வாறேயாகும். ஒருவன் "என்னை

அடித்தான்" என்றபோது உடலைத் தானாகவும், "என் உடம்பு" என்றபோது உடலைத் தன்னின் வேறாகவும், உடலுக்கிட்ட பெயரால் அழைக்கத் தான் செல்லலால் உடலுக்குடனாயும் இருத்தல் இவ்வுண்மையை விளக்குகிறது. உயிர்கள் உலகில் இருக்க உடலும் உயிரும்போல் அவற்றோடு கலந்து அவையாயிருந்து அபேதமாயும், அவை பொருள்களை அறிய அகரமும் மற்ற உயிர் எழுத்துக்களும் போல் வேறாய் பேதமாயும், அவை பொருள்களை அநுபவிக்கப் பண்ணும் இசையும் போலவும் பழமும் சுவையும் போலவும், அறிவும் கண்ணும் போலவும், உடனாய்ப் பேதாபேதமாயும் கடவுள் இருக்கிறார். ஆகவே, இறைவன் நாமாகவும், நம்மின் வேறாகவும், நம்முடனாகவும் இலனெனில் நாம் இருக்கவும், அறியவும் அநுபவிக்கவும் இயலாதென்பது பெற்றாம். இனி இம் மூன்று நிலைகளையும் ஒரே உதாரணத்தில் விளக்க ஆசிரியர் உருக்கிய அரக்கையும் அதனோடு சேர்த்தணைத்த கற்பொடியையும் காட்டுகிறார். கற்பொடியானது அரக்கோடு கலப்பினால் ஒன்றாயும், பொருண்மையால் வேறாயும், நீக்கமின்மையால் உடனாயும் இருத்தல்போல் முதல்வன் உயிர்களோடு ஒருங்கு கூடி நின்று நீக்கமின்றி நிற்றலினால் தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம்.

ஆசிரியர் கடைசி சூத்திரத்தில் சீவன்முத்தர் இலக்கணங் கூறுகின்றார். இச்சை அறிவு செயல்கள் இறைவனுக்கும் உள, நமக்கும் உள, சீவன் முத்தர்க்கும் உள. இறைவன் அவைகளை உயிர்கள் காரணமாகச் செலுத்துகின்றான். நாம் நிலையில்லாத அற்ப இன்பத்தை அளிக்கும் உலகப் பொருள்கள் மாட்டுச் செலுத்துகின்றோம். சீவன் முத்தர்களோ தம்மை விட்டுக் கழிந்த மலம் சேராமலிருக்கும்படி இச்சையையும், அன்பரோடுகூட அறிவையும், அடியார் வேடத்தையும், ஆலயத்தையும் அரனெனத் தொழச் செயலையும் செலுத்துகின்றனர்.

சிவஞான சுவாமிகள்*

இவ்வுலகில் நாம் பிறந்தது எதற்காக? நம் கருவி கரணங்களைக் கொண்டு நாம் செய்யவேண்டுவனவற்றைச் செய்தற்காகவேயாம். கருவி கரணங்களைத் தொழிற்படுத்தினுல்தான் நமக்கு மேன்மை உண்டு. இல்லையேல் உலகில் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் நாம் தாழ்வையே யடைவோம். இதுபற்றியே 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்' என்ற முதுமொழியும் எழுந்தது. திருவள்ளுவரும்,

> " முயற்சி திருவினை யாக்கும் முயற்சியின்மை
> இன்மை புகுத்தி விடும் "

என்று கூறினுர்.

ஒவ்வொருவரும் படுக்கையைவிட்டு எழுந்தவுடனே செய்யுங் காரியங்கள் மூன்று வகைப்படும். ஒன்று, நாம் இறைவனடியடைந்த பெரியோர்களை நினைத்தல் வேண்டும். இரண்டாவது, அன்று நமக்கு நேர உள்ள இடையூறுகளை நினைத்தல் வேண்டும். மூன்ருவது, இவ்விடையூறுகளை நினைத்தலோடு மட்டும் நிறுத்தாது அவைகளைப் போக்க ஆண்டவனை நோக்கி அழுதல் வேண்டும். இவையே நாம் தினந்தோறும் எழுந்த உடனே செய்ய வேண்டிய கருமங்கள். முன்காலத்தில், தினந்தோறும் எழுந்தவுடனே பஞ்சாங்கம் பார்க்கும் வழக்கம் இருந்து வந்தது. இது தின சுத்தி எனப்படும். அன்றைய தினத்தை மட்டும் கவனித்துவிட்டுப் பஞ்சாங்கத்தைக் கீழே வைத்துவிடும் வழக்கம் பெரும்பான்மையோரிடம் இல்லை; பக்கத்து நாட்கள் மீதும் நாட்டம் செல்லும். அவ்வாறு பஞ்சாங்கத்தைப் பார்க்கும் பழக்கத்தை நாம் விட்டுவிட்டதால் பெரியோர்களைப் பற்றி மறந்துவிட்டோம்.

26—4—37-ல் மயிலையில் நிகழ்த்திய சொற்பொழிவு—திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியார் பி.எ.,எல்.டி. அவர்களின் குறிப்பு.

இன்று சித்திரைத் திங்கள் ஆயில்ய நாள் ; இது, சிவ ஞான சுவாமிகள் திருநாள். சென்னைக்குச் சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள தொட்டிக்கலை கிராமத்தில் அவர்தம் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்தம் பெயரி லிருந்தே நமக்கு வேண்டியதைப் பெறுகிறோம். நமக்கு வேண்டுவதென்ன ? சிவஞானம். அவர்கள் சிவஞான சுவாமிகள் ; சிவஞானத்தைத் தமக்குச் சொத்தாக உடைய வர்கள். நாம் கேட்குந்தோறும் கேட்குந்தோறும் அவர் இல்லையென்னாது அவர்தம் உடைமையைப் பகிர்ந்து நமக்குக் கொடுப்பார். அப்பாகத்தை நாம் பெற முந்திக் கொள்வோமாக. சிவஞானமே எல்லா மதங்களின் முடி வாகும். இதை நமது சுவாமிகள், காஞ்சிபுராணத்தில் வெகு அழகாகக் கூறியிருக்கிறார்கள். 'விலகி வீழ் அருவித் தாரை.........ஏகமாய் கூடுந் தோற்றம்' என்ற செய்யுளில் ஒவ்வொரு மதத்தின் உண்மையும் வேகவதி நதியில் வந்து சேரும் ஒவ்வோர் அருவித் தாரைக்கு உவமையாகக் கூறப் படுகிறது. அவ்வருவித் தாரைகள் திரண்டு வேகவதி என் னும் நதியாதல்போல், இவ்வுண்மைகளெல்லாம் திரண்ட முடிபு சிவஞானமாகிறது. அத்திரண்ட முடிபையே பொரு ளாகக் கொண்டிருப்பவர் சிவஞான முனிவர்.

இனி சிவஞான முனிவரது பிறப்பு வளர்ப்பைப் பற் றிச் சிறிது கவனிப்பாம். தென் பாண்டி நாட்டில் பாபவிநா சத்துக்கு (பாபநாசம்) அருகில் விக்ரமசிங்கபுரம் என்றொரு கிராமம் உண்டு. அவ்வூரில் வேளாள குலத்திற் பிறந்த ஆனந்தக் கூத்தருக்கும், அவர்தம் அருமைப் பத்தினியா ரான மயிலம்மையார்க்கும் பிறந்தவர் நம் சிவஞான முனி வர். நமது சுவாமிகளிடம் குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமான் பேற்றைப் பெறுதற்குரிய குணாதிசயங்கள் காணப்பட்டன.

மக்களுக்குக் கல்வியை யூட்டுதல் பிதாவின் முதற் கடமையல்லவா ? ஆனந்தக் கூத்தர் தம் கடமையை நிறை வேற்ற எண்ணியவராய்த் தமது அருமை மகனாரைப் பள்ளி யில் வைத்தார். ஒருநாள், சிவஞான முனிவரான குழந்தை பள்ளிக்குச் செல்லும் வழியில் விபூதிதாரணரான இரண்டு அடியார்கள் எதிரில் வரக்கண்டது. அவ்விருவரும் திருவா வடுதுறை ஆதீன அடிகண்மார். அவர்களைக் கண்டதும்

குழந்தை ஆநந்த பரவசம் மேலிட்டது; பள்ளிக்குச் செல்வதை யொழித்து அவர்கள் இருவரையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றது. சிவஞான முனிவர் தந்தையில்லாததால், தாயாரிடஞ் சென்று அடியார்களை உண்பிக்கச் சொன்னார். அம்மையார் அமுது படைத்த திறத்தை நான் மயிலாப்பூரில் கூறவேண்டுவதில்லை. இவ்வூரார் அமுது படைக்குந் திறத்தைச் சம்பந்தரே புகழ்ந்திருக்கிறார். 'உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்' என்ற சொற்றொடரை அறியாதார் யார்?

அம்மையாரின் அன்பைக் கண்ட சுவாமிகள் ஒரு பாட்டைப் பாடினார். அஃது, "அருந்ததி என்னம்மை" என்னுந் தொடக்கத்ததாகும்.

இப் பாட்டில் கருத்து, சொல், பொருள் முதலிய எல்லாம் அமைந்திருக்கின்றன. இப்பாட்டைக் குழந்தைப் பருவத்திலுள்ள சிவஞான முனிவர் எவ்வாறு பாடினார்? இதற்கு முன் ஜென்மத்தில் அவர் எவ்வளவு புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்! அவர் ஜீவன் முத்தர். ஒருவன் ஒரு ஜென்மத்தில் படித்தவை ஏழு ஜென்மங்கள் வரை அவனைப் பின்பற்றுகின்றன வென்பது பொய்யாமோ?

மனிதர்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவையே பிராகிருதர், வைநயிகர், சாமுசித்தர் எனப்படும். படித்தும் அறியாதவர் பிராகிருதர். வைநயிகர் படித்த பின் அறிபவர். படிக்காமலே அறிகிறவர் சாமுசித்தர். நமது சிவஞான முனிவர் மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பெரிய அநுபூதிமான். நினைத்தவுடனே பாடவல்லவர். அவர் பரிசாரகனுக்குக் கட்டளையிடுதற் பொருட்டுப் பாடிய பாட்டைக் கவனியுங்கள். அது, "சற்றே துவையலரை" என்னுந் தொடக்கத்தது.

ஒரு சமயம் சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்க்கு வந்தார்கள். அப் பதி திருநாவுக்கரசு சுவாமிகளைக் கடலினின்றும் கரையேறவிட்ட பெருமையுடையது. ஆங்குச் செல்வந்தன் ஒருவன் இருந்தான். திரிபு வகையில் ஒரு பாட்டுப் பாடுபவருக்கு நூறு பொன் தருவதாக அவன் நிச்சயித்திருந்தான். அவ்வூரில் ஓர் அந்தணன்; நித்திய தரித்திரர்; தம் மகனுக்கு உபநயனம் செய்ய விரும்பினர்.

பணத்துக்கு என் செய்வது? ஒன்றும் தோன்றவில்லை. ஒருநாள் அவர் சுவாமிகளைச் சந்தித்தார்; தமது குறைகளைக் கூறிச் செல்வந்தன் கட்டிவைத்திருக்கிற பொற்கிழியையும், அதன் வரலாற்றையும் கூறினார்; நமது சுவாமிகள் ஒருவித யோசனையும் செய்யாது உடனே ஒரு கவியை எழுதிக் கொடுத்தார். அது 'வரையேற விட்டமுதம்' எனத் தொடங்கிக் 'கரையேற விட்ட முதல்வா' என்பதோடு முடிகிறது. நினைத்த மாத்திரத்தில் பாட்டுப் பாடுவதே சிறந்த முறையாகும். சிலர் ஒரு கவிக்காகப் பல நாட்கள் வரை முயல்கின்றனர். அவர் பாட்டுப் பாடும் திறன் வரப்பெற்றவரல்லர்.

கடவுளே எல்லாச் சாமர்த்தியமும் கைவரப் பெற்றவர். அவர் பூரண அறிவுடையவர். மனிதர் குறைந்த அறிவுடையவர். அறிவு இருவருக்கும் பொதுவே. அதனாலேயே கடவுள் சர்வக்ஞன் என்று அழைக்கப்படுகிறார். மனிதன் கிஞ்சிக்ஞன் என்று அழைக்கப்படுகிறான்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை வேறுவிதமாகவும் உவமைப்படுத்திக் கூறலாம். நம் மொழியில் கசடதபற என்ற ஆறு எழுத்துக்களும் வல்லெழுத்துக்கள் என்று கூறப்படுகின்றன. இவற்றில் கச தப என்ற நான்கு எழுத்துக்களே மொழிக்கு முதலில் வருவன. டறக்கள் மொழிக்கு முதலில் வாரா. கடவுள் கசதப முதலிய எழுத்துக்களைப் போன்றவர். உயிர்கள் டறக்கள்.

அகத்திய முனிவருக்குத் தொல்காப்பியர் முதலிய பன்னிரு மாணவர் இருந்தனர். அதுபோலவே நமது சுவாமிகளுக்கும் கச்சியப்பர் முதலிய பன்னிரு மாணவர் இருந்தனர். அம்மாணவருள் கச்சியப்பரே தலைசிறந்தவர்; தணிகைப் புராணம் முதலிய பல நூல்களை இயற்றியவர்.

நமது சுவாமிகள் மொழிபெயர்ப்பதில் திறமை வாய்ந்தவர்கள். சுவாமிகள் மொழிபெயர்த்த நூல்களில் சில 'அன்னம்பட்டீயம்', 'தருக்க சங்கிரகம்', 'சிவதத்துவ விவேகம்' முதலியனவாம். சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பதே சுவாமிகளின் சாமர்த்தியத்தைக் காட்டுகிறது. 'நித்தியவஸ்து' என்பதற்கு மன்னிய மெய்ப்பொருள் என்றலும், 'பக்தி' என்பதற்கு 'மெய்யன்பு'

என்றலும் எவ்வளவு சிறந்த சொற்கள் பாருங்கள். முண்டகோபநிஷத்தில் வரும் ஒரு வாக்கியத்தைச் ‘சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடில் அவனுடன் உறைக’ என்று மொழிபெயர்த்திருக்கிறார்.

விருத்தியுரை எழுதுவதிலும் சுவாமிகள் வல்லவர். இதை வடமொழியில் பாஷியம் என்று கூறுவது. தமிழில் சிவஞான முனிவருக்கு முன், ஒருவரும் விருத்தியுரை எழுதினது இல்லை. அதனாலேயே அவர் திராவிட மாபாடிய கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார்.

சிவஞான போதத்தின் காப்புச் செய்யுளைக் கவனிக்க. அது வருமாறு :

“ கல்லா னிழல்மலை, வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர், நல்லார் புனைவரே ”

இப் பாட்டை வஞ்சித்துறை என்பார்கள். இப்புத்தகம் நான்கு விஷயங்களைக் கூறுவது. அவை பிரமாணம், இலட்சணம், சாதனம், பிரயோசனம் எனப்படும். இந்நான்கு பொருளையும் குறிப்பதாகக் காப்புச் செய்யுளிலும் நான்கு அடிகள் இருக்கின்றன. செய்யுளின் கடைசியிலுள்ள ஏகாரம் இடைச்சொல். அதை நீக்க, அடி ஒன்றுக்கு மூன்று சொற்களாகச் செய்யுளில் பன்னிரண்டு சொற்கள் இருக்கின்றன. இப்பன்னிரண்டு சொற்களும் பன்னிரண்டு சூத்திரங்களைக் குறிப்பன.

இவற்றின் முன் ஆறு சூத்திரம் பொது. பின் ஆறு சூத்திரம் சிறப்பு. முன்னவற்றை அருளிய என்றும், பின்னவற்றைப் புனைவர் என்றும் சுவாமிகள் கூறுகிறார்கள். ‘உண்ணிய’ என்ற அப்பர் தேவாரத்திற்கு ‘உண்ண’ என்று பொருள் கூறுமாப்போல் ‘அருளிய’ என்பதற்கு ‘அருள’ என்று பொருள் கூறினார்.

சுவாமிகள், ‘செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்’ என்ற வேறொரு நூலையும் இயற்றியிருக்கிறார். அதில் சமய உண்மைகளை அறிந்து கடவுளை வழிபடுதலை விளக்கி யிருக்கிறார். சுவாமிகள் நம்மையெல்லாம் யானைகள் என்கிறார். யானைக்கு மூன்று மதங்கள் உண்டு. அவை கன்ன மதம், கபோல மதம், பீஜமதம் எனப்படும். நமக்கும் மூன்று

மலங்கள் இருக்கின்றன. அவை ஆணவம், கன்மம், மாயை. ஞானம் என்ற கட்டுத்தறியை அறுத்துச் செல்வது மதம் பிடித்த யானைக்கு முதல் அடையாளம். நாமும் அவ்வாறே அன்பு என்னும் சங்கிலியை உதறித்தள்ளி, அறிவு அல்லது அருள் என்னும் கூடத்தை விட்டு வந்து, புவனம் என்னும் கொடுங்காட்டில் ஓடுகிறோம்; எப்பாகர்க்கும் அடங்காது ஓடுகிறோம். அங்குச பாசத்தைக் கொண்ட விநாயகப் பெருமானாகிய பெரும்பாகனே நம்மை அடக்கவல்லவன். இக்கருத்தைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில் 'மும்மலம்' என்ற தொடக்கப் பதிகத்தில் வெகு அழகாகச் சுவாமிகள் கூறியிருக்கிறார்கள்.

இவ்வாறு சுவாமிகள் தமிழுக்கும் சிவபெருமானுக்கும் செய்யவேண்டிய பல தொண்டுகளைச் செய்து விட்டுக் கி. பி. 1785-ம் ஆண்டு (ஏப்ரல் மாதம் 17-ம் நாள்) சித்திரை ஆயில்யம் கூடிய ஞாயிற்றுக்கிழமை பகல் 1-40 மணிக்கு இப்பூத உடலை நீத்துப் புகழ் உடலை எய்தினார்கள்.

சைவ சமய அடிப்படைக் கொள்கைகள்

(மலர் - 30 ; இதழ் 10 ; 320-ம் பக்கத் தொடர்ச்சி)

பதி : உலகம் தோன்றி நின்று அழியும் தன்மையது; அறிவற்றது. ஆகையால், தானே முத்தொழில்களைச் செய்யாது. உயிர்களும், உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் ஆற்றல் உடையன அல்ல. ஆதலின் இத்தொழில்களுக்குத் தலைவர் யாரோ அவரே பதி, அரசன், சிவம். படைத்தல்—காத்தல்—அழித்தல் செய்யும் கடவுளர் முறையே பிரமன் திருமால் உருத்திரன் அல்லவா? அவர்களும் பதியின் ஆணை வழியில் நின்றே தம் தொழிலைச் செய்கின்றனர்; ஆதலின் இம்முத்தொழிலும் பதியின் தொழிலே. அதனால் இம் மும்மூர்த்திகளின் மேலானவர், பதி என்பது தெளிவாம். பதி ஒருவரே. ஆயினும் அவருடைய அருள் ஒளி எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் கலந்து நிற்கிறது. ஆதலின் அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இருவினைக்கு உட்பட்டவர் அல்லர்; ஆதலின் என்றும் இன்பம் உடைய

வர். பிறருக்குக் கட்டுப்பட்டவர் அல்லர் ; ஆதலின் தன் வயமுடையவர். ஐம்பூத காரியமாகிய உடலை உடையவர் அல்லர். ஆனால் தூய அருள் உடம்பினர். ஆணவ மலத்தால் மறைக்கப்படாத அறிவு உடையவர் ; இயற்கை உணர்வினர். ஏகதேச அறிவுடையவர் அல்லர் ; முற்றும் உணர்ந்தவர். ஆணவம் கன்மம் மாயைகளாய மும்மலத் தொடர்பு இல்லாதவர் ; ஆதலால் இயல்பாகவே பாசங்கள் நீங்கியவர். எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கும் ஆற்றல் உடையவர் ; ஆதலின் அளவற்ற ஆற்றலுடையவர். உயிர்கள் இடத்துப் பரம கருணைகொண்டு தனு கரண புவன போகங்களைக் கொடுப்பவர். ஆதலால் பேரருள் உடையவர். இத்தகைய பதி உயிர்களுக்கு ஓய்வுகொடுக்கும் பொருட்டு, உலகத்தை அதன் காரணமாம் மாயையில் ஒடுக்கும் தொழிலாகிய அழித்தலை உருத்திரர் மூலம் செய்கின்றவர். ஆதலால், அரன் எல்லா உயிர்களுக்கும் நன்மையையே புரிபவர் ஆதலால் அவர் சிவன். சிவனுடைய ஒரு கூறு உருத்திரர். ஆனால் உருத்திரனே சிவன் அன்று. சிவன் மும்மூர்த்திகட்கும் மேலானவர் ; என்றும் உள்ளவர்.

பசு: இது, இங்கு ஒரு விலங்கு அன்று; உயிர்களுக்குப் பொதுப் பெயர். ஆணவ கன்ம மாயைகளாகிய பாசத் தொடர்புடையது எதுவோ அதுவே பசு—ஆன்மா—உயிர். உயிர்கள் தொன்மையே உள்ளவை. இறைவனால் படைக்கப்பட்டவை அல்ல. இறைவனால் படைக்கப்பட்டவையாயின், உயிர்கள் யாவும் ஒரே தன்மையுடையனவாய் ஏற்றத்தாழ்வு சிறிதும் இன்றிப் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இறைவனால் படைக்கப்பட்டது உயிர்களுக்குரிய உடம்பும், அதற்கு அங்கமான கண் காது முதலிய புறக்கருவிகளும், மனம் புத்தி முதலிய அகக்கருவிகளும், உடலெடுத்த உயிர்கள் வாழ்வதற்கு உலகமும், அவ்வுலகத்தி லுள்ள துய்த்தல் பொருள்களுமே. உயிர்கள் எண்ணற்றவை; எத்தனையோ வகையான பிறப்புடையவை ; அவை செய்யும் வினைக்கேற்ப மாறி மாறிப் பிறந்து இறந்து உழல்பவை ; என்றும் அழிவு இல்லாதவை. எந்தப் பொருளைச் சார்கின்

றனவோ அதன் வண்ணமாக நிற்பவை. அழிவது உயிர் எடுத்த உடம்பே அன்றி, உயிர் அன்று.

உயிர் என்றால் யாது? நான் என்னும் சொல்லால் குறிக்கப்படுவதே உயிர் ; எனது உடல் என்பதனால் உடலினின்று வேறானது உயிர். ஓசை, ஒளி, மணம், சுவை, ஊறு ஆகிய ஐம்புலன்களையும் மனம் புத்தி இவற்றின் உதவியால் அறிகின்றது எதுவோ அதுவே உயிர். ஆழ்ந்த தூக்கத்தில் மூச்சுக் காற்றாகிய பிராணவாயு இயங்கினும் உடலுக்கு உணர்ச்சி இல்லையாதலால் பிராணவாயுவின் வேறானது உயிர். ஆனால் உயிர், பிராணவாயுவோடு நெருங்கிய தொடர்பு உடையது. ஆதலின் உடம்பிலுள்ள பிராணவாயுவின் நீக்கத்தால் உயிர் நீக்கம் அறியப்படுகின்றது. அதனால் உயிரும் பிராணவாயுவும் ஒன்று அல்ல. உயிர், மறந்து மறந்து நினைப்பதால் அது என்றும் முழு உணர்ச்சியோடு உள்ள இறைவனினின்று வேறாகும் ; இறைவனினின்று தோன்றியது அன்று. உயிர்கள் என்றும் உள்ளவை.

தொன்மையே தம்மைப் பிணித்துள்ள பாச வேறுபாட்டால் உயிர்கள் மூவகைப்படுவார்கள். அவர்கள் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் ஆவர். இவர்களுள், விஞ்ஞான கலர் உயர்ந்த நிலையில் இருப்பவர் ; ஆணவமலம் ஒன்றே உடையவர். பிரளயாகலர் இடைநிலையில் உள்ளவர் ; ஆணவம் கன்மம் உடையவர். சகலர் கடைநிலையில் உள்ளவர்; ஆணவம், கன்மம், மாயை உடையவர். இவ்வுலகில் வாழ்கின்ற மனிதர் முதலியோர் சகலர். ஸ்ரீகண்டர் முதலியோர் பிரளயாகலர், அணுசதாசிவர் முதலியோர் விஞ்ஞான கலர்.

மும்மலம் : ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றும் உயிர்களைக் கட்டுவதால் பாசம் என்று கூறப்படும். அவைகளினால் ஆன்மா தூய தன்மையின்றிப் பல தீவினைக் குற்றத்துக்கு ஆளாகின்றமையால் அவை மூன்றும் மும்மலம். ஆணவம், உயிர்களை அறியாமையில் அழுத்தி நிற்பது; மாயை தனுகரண புவன போகங்களாய் அமைவது ; கன்மம்—உயிர்களின் நல்வினை தீவினை. இம்மும்மலங்களும் தொன்மையானவை ; என்றும் உள்ளவை. ஆயினும், உயிரின் அறிவு

வளர்ச்சிக்கும், ஆண்டவன் செய்யும் அருளுக்கும் தக்கவாறு தம் வலிமை ஒடுங்கிச் செயலற்று, நிற்கும் தன்மையுடையன.

இம் மூன்றனோடு திரோத மலமும் மாயேய மலமும் கூட்டி மலங்கள் ஐந்து என்று கூறுதலும் உண்டு. திரோத மலம்—இறைவன் அருட்சத்தியே. உயிர்கள், ஆணவ வலிமை ஒடுங்கப்பெற்று வினைப்பயனை அனுபவித்து ஒழித்தற் பொருட்டு அருட்சத்தி உயிர்கள் உண்மையை அறிய ஒட்டாமல் சிறிதளவு மறைக்கிறது. (திரோதம்—மறைப்பு) அதனால் அச்சக்தி அந்நிலைமையில் திரோதமலம் எனப்படும். இது தீமை செய்வதுபோலத் தோன்றி நன்மை செய்வது. மாயேயம்—மாயாமலத்தின் காரியமாய உலகம் முதலிய வையே. இதனால் உலகம் உள்பொருள் என்பது தெளிவாகும்; பிறர் கூறுவதுபோலத் தோற்ற மாத்திரமாக இருப்பது அன்று ; அதாவது உள்ளதுபோலத் தோன்றுவது அன்று ; என்றும் உள்ளதே.

எனவே, கடவுள் (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) இம் முப்பொருளும் என்றும் உள்ள பொருள்கள்; ஒருகாலத்தில் தோன்றி மற்றொரு காலத்தில் அழிபவை அல்ல.

சிவம்—சத்தி : சிவம் ஒருவரே. அவரே பதி. அவர் ஆண் அல்லர் ; பெண் அல்லர் ; அலி அல்லர். உலகத்திலும் எல்லா உயிர்களிலும் கலந்து நிற்பவர் ; பேராற்றலும் பேருளும் உடையவர். அவர் இன்றி ஓர் அணுவும் அசையாது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும், பிரிக்க முடியாத சக்தியுண்டு. சிவத்துக்கு அளவற்ற சக்தியுண்டு. அது தீயிலிருந்து பிரிக்கமுடியாத வெப்பம் போன்றது. ஆயினும் மக்கள் எளிதில் சிவத்தையும் அவர் ஆற்றலையும் அறியும்பொருட்டு சிவத்தை ஆணாகவும், அவர் சக்தியைப் பெண்ணாகவும் முன்னோர் உருவகித்தனர். இவ்வகையாக அறிந்துகொள்ளுதல் இன்றிச் சிவசத்தியை நம்மைப்போல் ஆண்பெண் பாகுபாடாகக் கொள்ளுதல் கூடாது.

சைவர் ; உலகத்து உயிர்கள் பலவகைப்படும் : மரம் செடி கொடிகள் தொட்டால் அறிதலாகிய பரிச உணர்ச்சியுடைய ஓரறிவுயிர் ; சங்கு கிளிஞ்சல் முதலியவை பரிசித்தல்,

சுவைத்தல் என்னும் இரண்டு அறிவினையுடைய ஈரறிவுயிர் ; சிதல், எறும்பு முதலியவை பரிசித்தல், சுவைத்தல், மோத்தல் என்னும் மூன்று அறிவினையுடைய மூவறிவுயிர் ; நண்டு தும்பி முதலியன பரிசித்தல், சுவைத்தல், மோத்தல், பார்த்தல் என்னும் நான்கு அறிவினையுடைய நாலறிவுயிர் ; விலங்கு, பறவை முதலியன பரிசித்தல், சுவைத்தல், மோத்தல், பார்த்தல், கேட்டல் என்னும் ஐந்து அறிவினையுடைய ஐயறிவுயிர். இங்குக் கூறிய ஐந்து அறிவும் ஐம்புலன்கள். இவற்றிற்குக் கருவி மெய் (தோல்), வாய் (நாக்கு), மூக்கு, கண், செவி என்பவை. இவை ஐம்பொறிகள். மனிதன் இந்த ஐந்தறிவோடு 'இது நல்லது இது தீயது' எனப் பகுத்தறியும் மனவுணர்வாகிய ஆறுவது அறிவை உடையவன். ஆதலின் மனிதப் பிறப்பே எல்லாப் பிறப்புக்களினும் மேலானது. உயிர்களுக்கு மனிதப் பிறப்பு, மிக நீண்டகாலம் எத்தனையோ வகையான எண்ணற்ற கீழ் நிலையிலுள்ள பிறப்புக்களை எடுத்த பின்னர் சித்திக்கும். இப்பிறப்பு அருமையுடையது. இப்பிறவி நீங்கினுல் மீண்டும் இப்பிறவியே வருமென்பது நிச்சயம் அன்று.

ஆதலின், இத்தகைய அருமையான பிறப்புடைய மக்கள், தமது பகுத்தறிவால் உலகின் தன்மையையும், உயிரின் தன்மையையும், உலகம் எதன்பொருட்டு யாரால் படைக்கப்பட்டது என்பதையும் கேட்டு அறிந்து, பதி உளன் என நிச்சயித்து, அவன் பரங்கருணை இதுவெனக் கண்டு, பிறப்பு இறப்புக்களால் வரும் துன்பத்தை உணர்ந்து, உயிர்களின் நற்பயன் கருதி உடல் கருவி உலகம் இன்பப்பொருள்களை ஆக்கித் தந்த அம் முதல்வனிடத்து என்றும் மாறுத அன்பு கொள்ளக் கடமைப்பட்டவராவர்.

கடவுள் உண்டென்று அறிந்து அவர் செய்துள்ள பேர் அருளை எண்ணி எண்ணி அவர்மீது அன்புகொண்டு மனங் குழைந்து அவரை மனத்தால் தியானித்து, வாயால் புகழ்ந்து, கைகூப்பி, வணக்கம் செய்தலே கடவுள் வழிபாடு.

சிவனை வழிபடுவோர் சைவர் ஆவர். அவர் செயல் சைவம் ஆகும். சிவத் தொடர்புடையது சைவம். சிவத்

தொடர்பு உடையோர் சைவர். உடலைப் பற்றிக் கொள்ளப்படு கின்ற எந்த சாதியில் பிறந்தவரும் சிவனை வழிபடுவோர் சைவரே. சைவர், சைவம் என்ற சொற்கள் சாதி பற்றி வந்தது அன்று; சிவனை வழிபடும் சமயக் கோள்கை பற்றியது. விஷ்ணுவை வழிபடுவோர் வைணவர்; சிவனை வழிபடுவோர் சைவர். சைவர்கள் செய்யும் சிவ வழிபாட்டுக்கு சிவனிடத் துள்ள அன்பே முதற் காரணம். எனினும் அவ்வன்பிற்குத் துணைக் காரணமாக எல்லா உயிர்களிடத்தும் அன்புடைமை யும் பிற உயிர்களைக் கொல்லாமையும் கொலைக்குக் காரண மான ஊனைத் தின்னாமையும் முதலிய அறங்கள் வேண்டப் படும். எனவே சீவகாருண்ணியத்தைத் துணையாகக் கொண் டது சைவம். சைவர் என்போர் சீவகாருண்ணியத்தை மேற் கொண்டு ஒழுகக்கடவர்.

ஆண்டான் அடிமைத்திறம்: சிவனின் கருணையால் உடல், கருவி, உலகம், துய்த்தல்பொருள் உயிர்களுக்கு அளிக்கப்பட்டிருத்தலை உணர்ந்தோர், அவன் பேரருளை எண்ணி எண்ணி அவரது ஒப்புயர்வற்ற மேன்மையை பாராட்டுவர். அப்பாராட்டின் வழி அவர் எல்லாவற்றையும் இயக்குவோர், யாவர்க்கும் தலைவர் என்பது தோன்ற அவரே உலகத்தையும், உலகத்து உயிர்களையும் ஆள்பவர் என்னும் உண்மை விளங்கும். மும்மலங்களால் கட்டுண்டு தம் வச மின்றி பிறந்து இறந்து உழலும் உயிர், ஆண்டவனது பெருங்கருணை, பேரறிவு, பேராற்றல் ஆகிய இவற்றை உணருங்கால் தன்னை ஆண்டவனுக்கு அடங்கிக்கிடக்கும் ஒரு சிறு பொருளாகக்கொண்டு அப்பரம்பொருளைப் பாராட் டும் இயல்பே அடிமைத் திறம்.

உயிர்—மக்கட் பிறப்பை அடைந்து, சைவ சமயத்தை மேற்கொண்டு, சிவவழிபாடு செய்து, அவ்வழிபாடு மேம்பட உலகக் கட்டுப்பாடு நீங்கி, மிக உயர்ந்த நிலையை (முத்தி) அடையுங்காலத்தும் 'சிவனே ஆண்டான், உயிர் அவருக்கு அடிமை' என்று கொள்ளுதலே ஆண்டான் அடிமைத்திறம். இது சிவனடியார் கொள்கை.

(தொடரும்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

52-வது ஆண்டு நிறைவு விழா

திருமயிலாப்பூர்

செவிகாள் கேண்மின்களோ
சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ !

பேரன்புடையீர் !

நிகழும் ஏவிளம்பி ஆண்டு மார்கழித் திங்கள் 12-ம் நாள் (27-12-1957) வெள்ளிக்கிழமை தொடங்கி, 3 நாட்கள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **52-வது ஆண்டு நிறைவு விழாவும்,** அதன் அங்கமாகச் **சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும்,** சென்னைத் திருமயிலாப்பூர், தெற்கு மாடவீதியின் மேற்குக் கோடியில் **உள்ள "ஸாய் கான சபா"** மண்டபத்தில் அடுத்துக் காணும் நிகழ்ச்சி முறைப்படி நடைபெறும்.

சைவர் மாநாட்டைத் திறந்துவைக்கச் சென்னை அற நிலையப் பாதுகாப்பு மந்திரி - உயர்திரு. **பக்தவத்சலம்** அவர்களும், மங்கையர் மாநாட்டைத் திறக்கத் திருமதி. **சரோஜினி வரதப்பன் அம்மையார்** அவர்களும், இளைஞர்

மாநாட்டைத் திறக்க உயர்திரு. மணலி - இராமகிருஷ்ண முதலியார், பி.ஏ. அவர்களும் இசைந்துள்ளார்கள்.

ஆண்டு விழாவிற்கும், சைவர் மாநாட்டிற்கும் உயர்திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமை வகிப்பார்கள். திருமதி. ஜோதி வெங்கடாசலம் அம்மையார், எம்.எல்.சி. அவர்கள் மங்கையர் மாநாட்டிற்கும், உயர்திரு. ச. சிவகுமாரனார், எம்.ஏ. அவர்கள் இளைஞர் மாநாட்டிற்கும் தலைமை வகிப்பார்கள்.

தாங்கள் தங்கள் சபையினரோடும், ஏனைய நண்பர்களோடும் மூன்று நாட்களும் வந்திருந்து உடன் உறைவின் பயனைக் கொண்டும், கொடுத்தும் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ.,	மா. ப. தியாகராஜ முதலியார், பி.எ.,
சமாஜத் தலைவர்	சமாஜப் பொதுக் காரியதரிசி

வரவேற்புக் கழகத்தினர் :

அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ.	ம. சி. சம்பந்த முதலியார்
டி. மாணிக்கம் செட்டியார்	கமலக்கண்ண முதலியார், M.C.
நடராஜ முதலியார்	W. T. மாசிலாமணி முதலியார்
சிம்புமல் சௌக்கார்	அய்யா சுப்பிரமணிய முதலியார்
P. குப்புசாமி முதலியார்	

நிகழ்ச்சி முறை

ஏவிளம்பி மார்கழி 12உ வெள்ளிக்கிழமை (27-12-'57)

காலை 7—9 கபாலீச்சரத்தில் கோயில் வழிபாடும், சிங்காரவேலர் சந்நிதியில் முருகன் மூந்நூல் வெளியீடும், தலைவர்களை ஊர்வலமாக அழைத்து வருதலும்.

,, 9-12 திறப்புப் பேருரைகளும், தலைமைப் பேருரைகளும்.

மாலை 4—8 **சைவர் மாநாடு :** தேவார பாராயணம்.

சொற்பொழிவுகள் :

திரு. R. சண்முகசுந்தரம் செட்டியார் அவர்கள்
—அங்கும் இங்கும்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்கள் **—சைவமும் தற்கால நிலையும்**

தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

மார்கழி 13உ சனிக்கிழமை (28-12-'57)

காலை 7—8 வெள்ளீச்சரத்தில் கோயில் வழிபாடு.

,, 8-11 **மங்கையர் மாநாடு :** சொற்பொழிவுகள்:

திருமதி. புனிதவதி இளங்கோவன் அவர்கள்
—பெண்மணித் தொண்டர்கள்

திருமதி. சரஸ்வதி பாண்டுரங்கன் அவர்கள்
—தெய்வீக வாழ்க்கை

மாலை 4—8 **சைவர் மாநாடு :** தேவார பாராயணம், தலைவர் முன்னுரை, சொற்பொழிவுகள் :

திரு. புலவர் முருகவேள் எம்.ஓ.எல். அவர்கள்
—அகப்பொருளில் அருட்பொருள்

திரு. ஜி. வடிவேலாயுதம் எம்.ஏ. அவர்கள்
—நாவுக்கரசும் பாவின் நயமும்

தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

மார்கழி 14உ ஞாயிற்றுக்கிழமை (29-12-'57)

காலை 7—9 சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம், பணியாளர்கள் தேர்தல், தீர்மானங்கள்.

„ 9-12 **சைவ இளைஞர் மாநாடு :** பல இளைஞர்களின் சொற்பொழிவுகள், கருத்துரை, கடவுள் வாழ்த்து.

மாலை 4—8 **சைவர் மாநாடு :** தேவார பாராயணம், தலைவர் முன்னுரை, சொற்பொழிவுகள் :

சித்தாந்தப் பிரசங்காமிர்தம் - திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள் —**கணேசர் இறைவரா ?**

சித்தாந்த ரத்நாகரம் - திரு. க. வச்சிரவேல் முதலியார் பி.ஏ. எல்.டி. அவர்கள்

—**உண்மை விளக்கம்**

நன்றி கூறல், தலைவர் முடிவுரை, கடவுள் வாழ்த்து.

வாழ்க சீரடியாரெல்லாம்.

குறிப்பு :—அவைக்களத்தில் பெண்மணிகளுக்குத் தனி இடம் உண்டு. தங்கும் இடம், உணவு வசதிகள் வேண்டும் சமாஜ வெளியூர் அங்கத்தினர்கள் 20-12-57க்குள் சமாஜப் பொதுக் காரியதரிசிக்குத் தெரிவிக்க வேண்டும். சந்தா, நன்கொடை முதலியன சமாஜ சபா மண்டபத்தில் செலுத்தலாம். இந்த ஆண்டு விழாவின் செலவிற்காகச் சமாஜ அங்கத்தினர் அனைவரும் இயன்ற அளவு பொருளுதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். ரசீதும் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். ஆண்டு விழாவின் போது சமாஜப் பொன் விழா மலர் முக்கால் ரூபா விலைக்குக் கிடைக்கும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

திங்கள் தமிழ்த் தாள்

மலர்: முப்பது

1957

பத்திராசிரியர்:

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர்:

புலவர் - முருகவேள், எம்.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை - 4

உள்ளுறை

பொருள்	கட்டுரையாளர்	பக்க எண்

அரும்பெறல் மரபிற் பெரும்பெயர்—புலவர் முருகவேள், எம். ஓ. எல். ... 135
ஆசிரியனிடத் தன்பு—ஆசிரியர் ... 353
ஆலய அற்புதங்கள்—ஆசிரியர் ... 321
இயற்கையின் வளர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும்—புலவர் முருகவேள், எம். ஓ. எல். ... 101
இன்றைய சமயப் பணிகள்—வித்துவான் திரு. அ. நடேச முதலியார் 87, 103
இன்பியல் மனிதன்-புலவர் முருகவேள், எம்.ஓ.எல். ... 69
ஐந்தொழில் குறிக்கும் அபயகரம்—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. தி. கி. நா. குறிப்பு ... 274
கண்கண்ட தெய்வம்—திரு. க. தியாகராசன் ... 142
காரி நாயனுர் வரலாறு—திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல். ... 84
கையாடுதல்—ஆசிரியர் ... 161
கோவை கிழார் வாழ்த்து—சாந்தலிங்கர் கல்லூரி மாணவர் மன்றம் ... 357
சதாவதானம் நா. கதிரைவேற் பிள்ளை—திரு. எஸ். சுப்பிரமணியம் ... 236
சமயப் பொறை—ஆசிரியர் 129, 289
சமய வாழ்க்கையும் கூடா ஒழுக்கமும்—ஆசிரியர் ... 193
சமாஜ 51-ஆம் ஆண்டு அறிக்கை—திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு 14, 41
சமாஜ 51-ஆம் ஆண்டு நிறைவு விழா—திரு. G. கலியாணம் பிள்ளை, M. A., D. Econ. ... 37
சமாஜ 51-ஆம் ஆண்டு விழா வரவேற்பு—திரு. ச. அரங்கசாமிப் பிள்ளை ... 2

பொருள் கட்டுரையாளர் பக்க எண்

சிவஞான சுவாமிகள்—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் குறிப்பு ... 342

சிவப்பிரகாசர் செய்யுள்நலம்—திரு. வித்துவான் மு. அருணைசலம் பிள்ளை ... 106

சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை—புலவர் முருகவேள், எம். ஓ. எல். ... 17

சைவ சமய அடிப்படைக் கொள்கைகள்—திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு 315, 347, 359

சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள்—" திருவாசக மணி " ... 303

சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை—திரு. ச. கற்பகவள்ளி அம்மையார், B. Sc. (Hons.) ... 43

ஞானச் செய்தி—திரு. கா. இராமநாதன் செட்டியார், பி.ஏ., பி.எல். 177, 203

திருச்சேய்ஞலூர்—திரு. சு. சுவாமிநாத தேசிகர் ... 238

திருத்தொண்டின் நெறி—சித்தாந்தக் கலைமணி, வித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் ... 70

திருமுருகாற்றுப்படை, சைவ சித்தாந்த விளக்கமே —திரு. வித்துவான் செ. வேங்கடராமச் செட்டியார் 116, 147, 167, 210, 253, 267

திருமூலர் எண்ணுயிரம்—திரு. டாக்டர். பு. வே. தேவராஜ முதலியார் ... 294

திருவெண்ணெய்நல்லூரில் சுவாமிகள் பேருரை—திரு. கந்தநரசிம்மன் ... 280

தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் தலைமைப் பேருரை—கோவை கிழார் 225, 257

தேரூர்ந்த திரிபுராந்தகன்—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், நே. த. கிருஷ்ணசாமி முதலியார் குறிப்பு ... 371

பொருள்	கட்டுரையாளர்	பக்க எண்
நாளந்தா பல்கலைக் கழகமும் காஞ்சியும்	ஆசிரியர்	... 298
படைத்தல்	ஆசிரியர்	... 97
பாடி வழிபடுதல்	திரு. இரா. ஜெயதேவ்	... 113
பாவனையின் பயனே பக்தியின் விளைவு	திரு. மா. ப. தியாகராஜ முதலியார், பி. ஏ.	... 327
போராட்டத்தில் வேதாந்தம், சீருட்டத்தில் சித்தாந்தம்	ஆசிரியர்	... 33
முத்தித் தலைவர்	ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்	... 376
முருகன் நுண்மாண்	ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. தி. கி. நா. குறிப்பு	217, 241
முன்னேறுகிறோமா	அழகுமதியன்	... 143
மெய்கண்டார்	ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. கச்சி. முனிசாமி உடையார் குறிப்பு	... 331
மொழியும் பண்பும்	புலவர் முருகவேள், எம்.ஓ.எல்.	... 196
மௌனம் அல்லது பேசாத ஆனந்த நிட்டை	திரு. மா. ப. தியாகராஜ முதலியார், பி. ஏ.	... 284
விடை ஊரும் விமலன்	ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. கச்சி. முனிசாமி உடையார் குறிப்பு	... 364
விநாயகப் பிரபாவம்	ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல். குறிப்பு	... 185

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14

Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மலர் 30	ஹேவிளம்பி மார்கழி 1957 டிசம்பர்	இதழ் 12

ஆசிரியனிடத் தன்பு

(ஆசிரியர்)

பெரியோர்களிடம் அன்பு : பெரியோர்களிடம் அன்பு செலுத்தவேண்டும் என்பது நமது நாட்டுக் கோட்பாடு. அப்பெரியோர்களை ஐந்து வகையில் பிரித்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் முறையே தாய், தந்தை, ஆசான், மூத்தோன், தெய்வம் என்பார். இவர்கள் ஒவ்வொருவரிடமும் எந்தெந்த வகையில் அன்பு செலுத்தவேண்டும் என்பதற்கு முறைகளும் அம்முறைகளைப் பற்றிய சிறு எடுத்துக் காட்டுக் கதைகளும் இருக்கின்றன. இக்கொள்கைகளுக்கு எதிரிடையாக நடந்துகொண்டால் அதனால் ஏற்படும் தீமைகளும் அவைகளுக்கு ஏற்ற எடுத்துக் காட்டுக்களும் உண்டு. இவ் விபரங்கள் பாரதநாடு முழுவதும் வழங்குகின்றன. ஒவ்வொரு மொழியிலும் உண்டு. சிறப்பாக வடமொழியில் உண்டு. அவைகளில் பல வேறுபாடுகளும் தோன்றியிருக்கின்றன.

வடநாட்டுக் கொள்கை : பெரியோர்களைப் பற்றிய தமிழ்ச் சொற்களைக் கூறினோம். அவற்றிற்குரிய வடமொழிகளாவன: மாதா, பிதா, குரு, தெய்வம் என்பன. இக் கொள்கைகளை விளக்கமாக வடமொழியில் தர்மசாஸ்திரங்கள் மொழிகின்றன. வடநாட்டுக் கொள்கையின்படி அப் பெரியோர்களைத் தேவர்களாக மதிக்கவேண்டும். "மாத்ரு

தேவோப் பிரியர் '' முதலிய தொடக்க மொழிகள் இதனை வற்புறுத்துகின்றன. தாய், தந்தை, ஆசான் முதலியவர்களைத் தேவர்களாகப் பாவித்து வணங்குவது வடநாட்டுக் கொள்கை. அதுவே தமிழ்நாட்டிலும் புகுந்து பரவி விட்டது. இதனை வற்புறுத்தும் புராணக் கதைகள் அளவிற்கு மிஞ்சியிருக்கின்றன. அவைகளின் போக்கும் மிக விபரீதமாகவே இருக்கும். தமிழில் அவ்வாறு எல்லை கடந்ததாக இல்லை.

ஆசானிடத்தில் அன்பு (வடநாடு) : தாய் தந்தையரைப்பற்றிப் புதல்வர்கள் மிதம் மீறிய அன்பு கொள்ளவேண்டியது இயற்கைதான். ஆனால் கல்வி கற்பிக்கும் ஆசானிடம் அத்தனை அன்பு செலுத்தவேண்டியதில்லை. என்றாலும் வடநாட்டில் ஆசாரியனிடம் அபரிமிதமான பக்தி செலுத்த வேண்டியது என்று வடமொழி நூல்கள் கூறும். எந்தத் துரோகத்தையும் மன்னிக்கலாம் ; குருத்துரோகம் மன்னிக்கவே முடியாது என்று புராணங்கள் கூறும். இராமாயணத்தில் வசிட்டரிடம் தயரதன் கொண்ட பக்திக்கும், பாரதத்தில் துரோணனிடம் பாண்டவர்களும் கௌரவர்களும் கொண்ட பக்திக்கும் அளவில்லை. மிகவும் மிதம் மீறியுள்ளது ஏகலைவன் கதை !! நேரில் வில்வித்தை கற்றுக்கொடாதிருந்து மறுத்தும் மானசீகமாகக் குருவாகக் கொண்ட செய்திக்கு வித்தைக்கு உயிராகும் பெருவிரலை அறுத்துக் கொடுக்கும்படி கேட்டு வாங்கின துரோணனுக்குக் கொடிய குருத்துவம் எத்தகையது என்று கூறவும் வேண்டுமா ?

தென்னாட்டுப் பழக்கம் : தமிழ் நாட்டில் இத்தனை கொடுமை ஆசான் கொண்டிருந்ததாகக் காணோம். சங்க காலத்தில் புலவர்கள் இந்தக் கொடிய கொள்கைகொண்டிருக்கவில்லை. வடமொழிப் புராணங்கள் தெற்கே வந்து நுழைந்த பிறகுதான் இக்கொடுமையும் நுழைந்தது. சங்க காலத்தில் புலவர்களை அரசர்களும் நண்பர்களாகவே கொண்டிருந்தார்கள். வடக்கிருத்தல் முதலிய கொடிய வழக்கத்தைப் பிசிராந்தையார் கொண்டிருந்ததும் நட்பின் செயலே யன்றிக் குருபக்தியினால் அன்று. குருபக்தி யல்லது ஆசிரியன் அன்பு சேர, சோழ, பாண்டியர் பேரரசின் பிறகே தோன்றியது.

இராசேந்திர சோழன் தன் குருவான சம்புசிவாச்சாரியருக்கு மதிப்பில் கடந்த நிலக்கொடை செய்தது வடமொழி புகுத்தின செய்தியே யாகும்.

தமிழ்ச்சொல் குறை : " எழுத்தறிவித்தவனை இறைவனாகக் கொள்ளும் எண்ணம் பிற்காலத்து அதிவீரராம பாண்டியன் சொன்ன வடமொழி இறக்குமதியாகும். குரு, ஆசாரியன் என்ற சொற்களுக்குத் தனியான தமிழ்ச்சொற்களும் கிடைக்கவில்லை போலும். எழுத்தறிவித்தவன் என்ற மொழி பெயர்ப்பு இரட்டைச் சொல் ஏன் வேண்டுமோ? ஆகவே குருவைத் தேவனாகப் பாவிக்கும் கொள்கை தமிழுக்கும் புறம்பானதோ என்று ஏன் கொள்ளக் கூடாது. எழுத்தறிவித்தவனே தேவனானால் ஞானம் அளித்தவன் எப்படிப் பட்ட புனித புருடரோ அறியோம். இந்த எல்லை கடந்த கொள்கைகள் தமிழில் இல்லாதிருக்க வடநாட்டிலிருந்து புகுந்து தமிழைக் கெடுத்துவிட்டது என்று சொல்லலாமா!

பிற்காலக் கொள்கை : பின்வந்த மற்றொரு சதக ஆசிரியர் ஆசான் மாணவன் இலக்கணங்களைச் சொன்ன போது மிதமீறியதும் பகுத்தறிவுக்குப் புறம்பானதுமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அறப்பளீசுவர சதகத்தில் அம்பலவாணக் கவிராயர் கீழ்க்காணுமாறு கூறியுள்ளார்.

" வைதாலு மோகொடுமை செய்தாலுமோ சீறி
மாறு திகழ்ந்தா லுமோ
மனதுசற் றாகிலும் கோணாது காணாது
மாதா பிதா எனக்குப்
பொய்யாமல் நீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்து பொருள் உடல் ஆவியும்
புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில் வீழ்ந்து
மெய்யாக வேபரவி உபதேசமது பெற
விரும்புவோர் சற்சீடராம்
வினைவே றரும்படி அவர்க்கருள் செய்திடுவதே
மிக்கதே சிகரதுகடன்

ஐயாபுரம் பொடிபடச் செய்த செம்மலே
அண்ணல் எமதருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே"

என்ற செய்யுளில் கண்ட பொருளைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். இக்கொள்கை அறிவற்ற காட்டுமிராண்டிகளுக்குத் தகுமன்றி அறிவு பெற்ற பண்பாடுள்ள மக்களுக்குத் தகாது என்பாம் அல்லவா?

குருவின் பண்புகள் : குரு என்ற நிலையைக்குறிக்கும் தனிச்சொல் தமிழில் இல்லாதபோது அந்தக் குருவின் பண்புகள் எவ்வாறு இருக்கும். இவை யெல்லாம் பின் நாளின் கற்பனைகளே. யாகத்தில் பசுப்பலி கொடுத்தல் பண்டைய தமிழரில் இருக்கவில்லை. ஏனெனில் அவைகளைக் குறிக்கும் தனித்தமிழ்ச் சொற்கள் இல்லை. யாகம், அவி, பலி என்பவைகள் வடமொழிச் சொற்களே. வடநாட்டிலிருந்து யாகம் செய்யும் கொள்கை தெற்கே இறக்குமதியான பிறகு அந்தச் சொற்களே ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதுபோல் குரு, குருபக்தி என்ற சொற்களும் அவைகள் பிறப்பிக்கும் கொள்கைகளும் தென்னாட்டிற்குப் புறம்பானவை. தனி மொழிச் சொற்கள் இல்லாததே இதனை நிரூபிக்கின்ற தல்லவா!

முடிபு என்ன? இந்த ஆராய்ச்சிக் கருத்து சில பேருக்குப் பிடியாதிருக்கலாம். என்றாலும் இதனை நன்கு ஆராய்ந்து பார்க்கட்டும். பல நாட்களாகப் பல மக்கள் கொண்ட கருத்துக்குச் சிறிது மாறுபாடாக ஒன்றைக் கூறினால் மனது எளிதில் ஏற்றுக் கொள்ளாதது தான். ஆனாலும் எண்ணங்களை ஒன்றுபடுத்தி ஆராயட்டும். இந்தக் கொள்கையில் ஒரு சிறிதாவது உண்மை இருந்தால் ஏற்றுக் கொள்ளட்டும் என்று இதனை இங்கே எழுதினோம்.

வாழ்த்து

சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி,
மாணவர் மன்றம், பேரூர்

தமிழ்க் கல்லூரித் தலைவரும், சித்தாந்தம் ஆசிரியருமாகிய சைவ ஞாயிறு, கோவைகிழார், ராவ்பகதூர் - C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A., B.L. அவர்களுடைய 70-வது ஆண்டுப் பிறந்த நாள் விழாவன்று (19-11-57) அன்னாரைப் பாராட்டிக் கல்லூரி மாணவர் மன்றத்தின் சார்பில் ஒரு கூட்டம் நடந்தது. அதுபோழ்து மணவர்களால் படித்தளிக்கப்பட்ட வாழ்த்து.

தண்ணளியும் நல்லருளும் தகைமைமிகு
நல்லொளியும் தந்து நாளும்
பண்ணவரும் நன்றேத்தப் பணிபுரியும்
நல்லியல்பும் பகைமை யின்றிக்
கண்ணகன்ற ஞாலமுளார் கண்டுநனி
களிகூரக் கனிந்த பார்வைக்
கண்ணொளிசெய் சந்திரனும் கடமைபுரி
நீயுமொரு கணக்கோ கூறாய். 1

மண்ணதனில் எத்துணையோ மன்னவரும்
மற்றையரும் வறிதே தோன்றி
எண்ணுதற்கும் அடங்காராய் இறந்தொழிந்தார்!
நீயெனிலோ, இலக்கி யத்தின்
பண்ணமைப்பும் தென்னாட்டின் பரந்தமைந்த
வரலாறும் பாரின் மிக்க
தண்மைமிகு சிவநெறியும் தனித்துயர்ந்த
தமிழ்மொழியும் தழைக்க வாழ்வாய்! 2

இன்னும் நெடிதேயிருந்து இனியவுரை
பலவீந்து இகல்கள் போகத்
துன்னுகலை பலவாக்கித் தூயதமிழ்க்
கல்லூரித் தொண்டும், ஏன்ற
பன்னுகலை அமைப்புகளும் பகர்சைவத்
தூநெறியும், பாரோர் வாழ்த்த
மன்னியெழில் பெற்றோங்க வளர்க !வெந்தை
நின்னுடைய வாழ்நாள் தாமே. 3

மடமையிருள் சென்றொழிய அறிவுமழை
பொழிந்தெம்மை வாழச் செய்தே
கடமைபுரி யெங்கோவே! கடையரெங்கள்
வாழ்நாளை நின்னு ளோங்க
உடைமையென வீகின்றோம் ! உவர்க்காது
தாமேற்று உலகில் நாளும்
விடையவனின் திருவருளால் நெடிதுநீ
வாழ்கவென்று விழைகின் றோமால் ! 4

வாழ்கநீ யெந்தாய் !நின் வாழ்நாளும்
பலவாக ! மாசில் கல்வி
சூழ்க !உயிர் துயர்தீர்க ! நின்னும
நினைவாலெம் துயர்கள் யாவும்
ஆழ்க !என்றும் எமையாண்ட வண்ணல்திருச்
சாந்தலிங்கர் அடியை மேவி,
வீழ்ந்தடியோம் வேண்டுகின்றோம். எங்கோவே
நீர்வாழ்க ! இனிது தானே. 5

சைவ சமய அடிப்படைக் கொள்கைகள்

(மலர் - 30 ; இதழ் 11 ; 352-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு படிகள் : சிவனடியார் வழிபாட்டில் : திருக்கோவிலை வலம் வருவர் ; தலையால் வணங்குவர் ; கண்களால் காண்பர் ; கைகளைக் கூப்பித் தொழுவர் ; போற்றுவர் ; புகழ்வர். சிவாலயத்துக்கும் சிவனடியார்கட்கும் வேண்டும் பணிகளைச் செய்வர். இதுவே சரியை. சரியை (உடல் தொடர்பான) நடத்தல் முலியன செய்தல்.

சரியையைப் பின்பற்றி, ஒழுகும்போது சிவனைப் பூசிக்க அருச்சிக்க மனம் செல்லும். அதனால் மனத்தாலும் உடலாலும் பூசித்தலாகிய சிவவழிபாடு செய்வர். இதுவே கிரியை (செயல்).

கிரியையின் வழி ஒழுகி வழிபாடு செய்யச்செய்ய மனம் உலகப் பற்று நீங்கி சிவன் பேரருளை எண்ணி அதில் ஈடுபட்டுத் தன்னை மறந்து தியான வடிவமாகி ஆண்டவன் அருளொடு ஒன்றுபட்டு நிற்பர். இதுவே யோகம் (கூட்டம் ; ஒன்றுதல்).

சரியை கிரியை யோகங்களால் முறையே சிவ வழிபாடு செய்யும் அடியார், முப்பொருள் உண்மை, ஆண்டான் அடிமைத்திறம் விளக்கமாக அறிவர். அப்படி அறியுங்கால் தமது அறிவு ஒழிந்து சிவன் அறிவே தலைநிற்பர். இதுவே ஞானம் (அறிவு.)

இந் நான்கும் காரண காரியமாக நிற்பது. எப்படி அரும்பிலிருந்து பூவும், பூவிலிருந்து காயும், காயிலிருந்து கனியும் முறையே ஒன்றற்கொன்று காரண காரியமாகத் தோன்றுகின்றதோ, அதேபோல் சரியையிலிருந்து கிரியையும், கிரியையிலிருந்து யோகமும், யோகத்திலிருந்து ஞானமும் கிட்டும். எனவே சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கும், சிவவழிபாட்டில் காரண காரிய முறையே ஒன்றை விட ஒன்று உயர்வான படிகள் ஆகும்.

நல்வகை வழி : சிவ வழிபாட்டில் கைவரப்பெற்றோர் தம்மைச் சிவனுக்கு அடிமையாகவும் பிள்ளையாகவும், தோழ

ராகவும் கொள்வர். இன்னும், இவ்வாறெல்லாம் கொள்ளாது சிவஞானம் கைவரப் பெற்றவர், ஞான நிலையில் மாத்திரம் நின்றும் வழிபடுவர். இந் நான்கு வழிகளும் முறையே அடிமை வழி (தாசமார்க்கம்) பிள்ளைமுறைவழி (புத்திர மார்க்கம்) தோழமை வழி (சகமார்க்கம்,) ஞானவழி (சன் மார்க்கம்) என்று கூறப்படும்.

சிவ சின்னங்கள் : மக்கள் தங்கள் கடவுட் கொள்கை பற்றிச் சிற்சில சின்னங்களை அணிவது தொன்று தொட்ட மரபு ; அவையே திருநீறு (விபூதி) அட்சமணி (உருத்தி ராட்சம்.) [பூதி - செல்வம். விபூதி - உயர்ந்த செல்வம். நீறு - பஸ்மம். திரு - அதன் உயர்வை விளக்குவது. உருத்தி ராட்சம் - உருத்திர னுடைய கண்] விபூதி உருத்திராட்சங்களை யணிதல் சைவர்களின் தொன்றுதொட்ட வழக்கம்.

நெருப்பின் மேல் நீறு பூத்திருத்தல் வெளிப்படை. சிவன் சோதி வடிவன். ஆதலின் ருத்ராக்னியின் மீதுள்ள வீரியம் நீறு எனப்படும். விபூதி வெண்மை நிறம். வெண்மை தூய்மைக்கு அறிகுறி. விபூதி பசுவின் சாணத்தை உலர்த்தி நெருப்பிலிட்டு நீறுக்குவதால் உண்டாகின்றது. ஆன் மாவின் (பசு) மும்மலம் ஞான நெருப்பினுல் எரிக்கப்பட்டுத் தம் வலியிழந்து அடங்கும் என்பது திருநீற்றின் குறிப்பு. எனவே, விபூதி அணிதல் மும்மல நாசம் குறிக்கும். இன்னும், சர்வ சங்கார காலத்தில் எல்லாம் நீருய் ஒழியும் என்னும் உலக வாழ்க்கையின் அழிவும், உயிர் தனது மலம் நீருன பின்னரே உண்மை உணர்ச்சி பெற்றுப் பேரின்பமுறும் என்னும் தத்துவமும், திருநீறு இடுதலின் குறிக்கோள் ஆகும்.

முப்புரம் எரிக்கத் தனது கண்களை மூட அவைகளி லிருந்து வெளிப்பட்ட நீர்த்துளிகள் இறைவன் எண்ணப் படி உருத்திராட்ச மரங்களாயின. அம் மரங்களின் காய்களே உருத்திராட்ச மணிகள். இவ்வரலாற்றில் இரண்டு உண்மை கள் உணரலாம். ஒன்று, உருவமில்லாத இறைவன் உருவத் திருமேனி தாங்கித் தனது திருக்கண் நோக்கத்தால் மும்மல

காரியங்களை ஒழியச் செய்வான் என்பது. இரண்டு, வருந்திய உயிர்களின் துயருக்கு இரங்கி அருட் கண்ணீர் பொழிந்து அருள் செய்வான் என்பது.

திருநீறு அணிதல் மலத் தொடர்பு அற்றுத் தூய்மை நாடுதற்கறிகுறி ; அக்கமணி அணிதல் - ஆண்டவன் அருட் குணத்திற்கு அறிகுறி.

திருக்கோயில் : இறைவன் காட்டும் பேருளை அறிந்து அவர்பால் அன்புகொண்டு வழிபாடியற்றக் கருதுவோர், அவரை ஒரு வடிவத்தில் பாவித்தல் வேண்டும். இன்றேல் மனம் ஒரு வழிப்படாது. மனத்தின் இயல்பு ஒன்றைப் பற்றி நிற்பது. ஆதலின் இறைவழிபாட்டிற்கு இலக்காக ஒரு உருவம் வேண்டப்படும். அந்த உருவமே விக்ரகம். சிவலிங்கம் சிவபிரானை எண்ணி வழிபடுதற்கு உதவியாக இருக்கும் குறி. சிவபிரான் ஐந்தொழிலால் உலகத்தைச் சித் தரிக்கின்றார். லிங்கம்—குறி சித்தரித்தல். இதன் வடிவம் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட உருவமும் ஆகாமல் அருவமும் ஆகாமல் அருவுருவமா யுள்ளது. இது அவர் குறிப்பிட்ட உருவமுடையவர் அல்லர் என்றும், உயிர்கள் வழிபட்டுய் தற்குக் கருவியாக ஒருவகை உருவத்தில் பாவிக்கப்படுவன் என்றும் காட்டுகிறது. எனவே இவ்வுருவம் இறைவழிபாட் டிற்குக் கருவியே. எங்குமுள்ள இறைவன் இவ்வுருவத்தில் பாவிக்கப்பட்டு அன்பர்களின் தியான வழிபாட்டுக்கு இரங்கி அருள் புரிவன். இத்தகைய லிங்கத்திற்கு இடமாயுள்ளது சிவாலயம். சிவாலயத்தைக் கண்டதும் சிவலிங்க நினைவும் சிவலிங்கத்தைக் கண்ட போது சிவன் நினைவும் வரும். அந் நினைவு வரவே, அப்பெருமான் காட்டும் பேர்அருள், பேர் ஆற்றல் முதலியன மனதில் நின்று அவர்பால் பேரன்பு காட்டுதற்கு உதவுகின்றன. ஆகவே திருக்கோயில் சிவ னிடத்து மாறா அன்பு காட்டுதற்குச் சிறந்த கருவியாக அமைந்திருப்பது.

வீடுபேறு : மனிதப் பிறப்பை அடைந்தோர் அறம் பொருள் இன்பம் அடைந்து அவற்றை பாதுகாத்தலில்

முனைந்து நிற்றல் இயற்கை. அற வழியில் பொருள் ஈட்டி அறநெறி வழுவாமல் இன்பந் துய்த்தல் இழுக்கு அன்று. எனினும், இவ்வுலக இன்பம் நிலையற்றது என்னும் உண்மை தோன்றினபின் நிலையுடைய இன்பத்தில் மனம் செல்லும். அந்நிலையுடைய இன்பத்தைத் தருவதே முக்தி (விடுதலை). உலகப்பற்று நீக்கமே பேரின்பம். வீடுபேற்றுக்குக் காரணம் அதுவே. மனம் ஒன்றைப்பற்றியே நிற்கும்; ஆதலின் உலகப்பற்று நீங்க நீங்க இறைவனிடத்துப் பற்று மிகுதியாகவளரும். உலகப்பற்று முற்றும் நீங்கிய பின்னரே பிறப்பு நீங்கும். பிறவி உள்ளவரை பற்று ஒழியாது. பிறவிக்குக் காரணம் உலகப்பற்று. அதனால் சிறிது சிறிதாக உலகப்பற்றை அறுத்துச் சிவனிடத்து அன்பு கொள்ளக் கொள்ளப் பிறவி நீங்கி என்றும் அழியாத பேரின்பம் அடையும்.

மனிதப்பிறப்பை யடைந்தோர் அறம் பொருள் இன்பம் வீடு (—) என்ற உறுதிப் பொருள்களை அடைதற்கு உரியோர். மனிதப் பிறப்பினால் அடையக்கூடிய சிறந்த பொருளாக இருப்பது வீடுபேறு. இவ்வீடு பேறு ஏனைய மூன்றையும் அறநெறி வழுவாமல் அடைந்து ஒழுகுதலின் பயனாக வரக்கூடியது.

சீவன் முத்தர் : உயிர்களின் பிறவிக்குக் காரணம் இருவினை. அவையே கன்மம். அக்கன்மம் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூன்று வகைப்படும். இருவினைகளையும் ஒன்றாக மதித்து ஆணவத்தின் வலிமை குன்றப்பெற்று அதனால் சிவனது அருட்சத்தி பதியப்பெற்று இடையறாத முதிர்ந்த அன்பினால் அவன் திருவடிகட்குத் தொண்டு பூண்டு ஒழுகுவோர் உடலோடு இருப்பினும் முத்தரே. அவர்கட்கு உள்ள வினைக்கூட்டத்தில் சஞ்சிதவினை சிவஞானத் தீயினால் எரிக்கப்பட்டு விடும். அவர்கள் யாவும் சிவன் செயலெனக் கொள்பவர். ஆகலால் மேல்வரக் கடவதாகிய ஆகாமிய வினை அவர்கட்கு இல்லை. உடல் எடுத்தது பிராரத்த வினை. ஆதலின், அவ்வினை உள்ள அளவும் உடல்

நிலைத்து நிற்கும். நிற்பினும் அவர் முக்தரே. அவருக்கு உள்ள முக்தி சீவன் முக்தி. அவர் சீவன் முக்தர் இத்தகைய சீவன் முக்தி நிலையில் உள்ளோரையும் பல பிறவிப் பழக்கத்தால் மும்மலங்களின் குற்றம் சிற்சில சமயங்களில் அணுகும். அவர் முக்தராதலால் தமது சிவஞான நீரினால் அக்குற்றங்களைக் கழுவி ஐந்தெழுத்தை ஓதுவர். அதனால் வாசனமலம் சாராது நீங்கும். இன்னும் அவர் சிவாலயத்தையும் சிவனடியார் திருவேடத்தையும் சிவன் எனவே தொழுது பேரின்பம் எய்துவர்.

பெரியபுராண மூலம்

சமாஜ மூன்றும் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும்பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு. விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும்பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர் பைண்டு விலை அணா பன்னிரண்டு.

கிடைக்கும் இடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1

விடை ஊரும் விமலன்*

அயனுந் திருமாலும் வந்து பிறப்பதற்கு ஆசைப்படு கின்ற இச்சிறந்த உலகத்தில் பலவகைப்பட்ட பிறவி களுக்குள் மிக உயர்ந்த ஒன்ருயிருக்கின்ற மனிதப் பிறவியை அடைந்த நாம் பல பொருள்கள் உடையராயிருக்கின்ரேம். அவற்று ளெல்லாம் மிகச் சிறந்தது அறிவு. எது ஒன்று உடைமையால் எல்லாம் உடையராய்க் கருதப்படு கிரேமோ, எது ஒன்று இன்மையால் மற்ற யாவுமிருந்தும் ஒன்றும் இலராய்க் கருதப்படுகின்ரேமோ, அது அறி வாகும்.

" அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர் "

இவ்வறிவு ஒன்றே மனிதனைச் சிறப்பிப்பது. இஃது ஆராய்ச்சி அறிவு, அனுபவ அறிவு என இருவகைப்படும். ஆராய்ச்சி அறிவு இருந்தபின் தான் அனுபவ அறிவு விளங்கும். ஆராய்ச்சி அறிவை நாம் முன்னர்த் தொழிற் படுத்த வேண்டும். அறிவு தொழிற்பட மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து கருவிகள் உதவி செய்கின்றன. இவற்றுள் தூரத்தில் சென்று அறியும் இயல்புடைமையின் கண் மிகச் சிறந்த கருவி. கண்ணுக்குப் புலப்படும் பொருள் களை முதலில் ஆராய்ந்து பின் புலப்படாத பொருளை ஆராய்ந்து அதைப் பெற்று அதனுல் உண்டாகும் இன் பத்தை அனுபவிக்க வேண்டும் என்று நிச்சயிப்பவரே அறிவு பெற்றுராவர்.

கண்ணைக் கொண்டு ஆராயப் புகின் அதற்குப் புலப் படுவது உலகமும் அதிலுள்ள பலவகைப்பட்ட உடல்களு மாம். ஐம்பூத இயற்கை நிலை உலகம், அவற்றின் மாறிய நிலை உடல். உடல்கள் அவன், அவள், அது எனும் மூவகைப் பகுப்பினவா யிருக்கின்றன. ஒவ்வொரு பகுப்பும் பலவேறு

---

* 27-4-37ல் மயிலையில் நிகழ்த்திய சொற்பொழிவு. கச்சி முனிசாமி உடையார் அவர்கள் குறிப்பு.

வகைப்பட்டிருக்கின்றன. பலவேறு வகைப்பட்ட அவயவப் பகுப்புடைய இவ்வுலகம் அறிவுடையதா யிருக்கவும் இல்லை. உலகத்தை ஐயந் திரிபற உண்மையாய்க் காண்கின்றோம். ஆகவே கண்ணறிவு கொண்டு உலகத்தை ஆராய நுழைந்த காலத்து அஃது பலவேறு வகையாய், அவன், அவள், அது எனும் அவயவப் பகுப்புடையதாய்க், கண்ணுக்குப் புலப்படுவதாய், அறியாமை உடையதாய்த் தோன்றுகிறது. ஒரு தன்மைத்தா யிராமல் பல வேறு வகையாய் மூன்று அவயவப் பகுப்புடைமையின் உலகம் இயற்கை யன்று, நித்திய மன்று, என்பதும்; அறிவற்ற பொருளானமையின், தானே தொழிற்படும் சக்தியின்றி ஒருவனால் தொழிற்பட வேண்டுதலின் அது செயப்படுபொருள் என்பதும்; செயப்படு பொருளாய்க் கண்ணால் காணப்படுவதால் அழியும் பொருள் என்பதும் நன்றாய் விளங்குகின்றன.

செயப்படு பொருளாகிய உலகத்திற்குக் கர்த்தா ஒருவன் இருக்க வேண்டும். அவன் நம்மில் ஒருவனன்று. ஏனெனில் நம்மில் யாருக்கும் இவ்வுலகத்தில் ஒரு சிறு பாகத்தையேனும் உண்டுபண்ணிக் கொள்ள ஆற்றலில்லை; நம் உடலில் ஒரு சிறு அவயவத்தையும் உண்டுபண்ணிக் கொள்ள நமக்கு ஆற்றலில்லை என்றால், இப்பெரிய அதிவிசித்திரமான உலகத்திற்கு நாம் எங்ஙனம் தலைவராகக் கூடும். ஆகவே உலக கர்த்தா உயிர் வர்க்கங்களில் ஒருவனல்லன். அவனைத் தேடப்புகின் அவன் உலகத்தைக் கடந்திருப்பான். குடத்தைச் செய்த குயவன் குடத்தைக் கடந்திருப்பது போல். அதனால் அவன் கடவுள். அவன் உலகமாகிய ஐந்து பூதங்களில் ஒன்றல்லன், அவை ஒன்று சேர்ந்த உலகமு மல்லன், உலகத்திலுள்ள உயிர் வர்க்கங்களிலும் ஒன்றல்லன். எனினும் அவன் நம்மால் ஆராயத் தக்கவன். உலகத்தைக் கொண்டு ஆராய்ந்தால் கொஞ்சம் தோன்றுவான். இப்படி ஆராய்ந்து அறிந்து அறிந்து அனுபவித்த பெரியார்களின் வாக்கு இதற்குச் சான்றாயிருக்கிறது.

"மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை
யிரவல்லை பகலல்லை யாவுமல்லை

பெண்ணல்லை யாணல்லை பேடல்லை
பிறிதல்லை யானும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
உணர்வரிய ஒற்றியூருடைய கோவே '' —அப்பர்.

'' *யாவையும் எவருந் தானாய் அவரவர் சமயந்தோறும்*
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின்மூர்த்தி
ஆவிசேர் உயிரி னுள்ளான் ஆதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக் கூடில் அவனையும் கூடலாமே —நம்மாழ்வார்.

'' பெரியாய் நீயே '' என்றமையால் அவன் பெருமை யுடையவன் என்பது விளங்கும். பெருமை யுடையதைத் தான் நாம் பேசவேண்டும், சிறுமையுடையதைப் பேசின் அச்சிறுமை நம்மையே வந்தடையும். நாம் அறிவது தோன்றுவதில்லை. இறப்பு பிறப்புகள் நிகழ்கின்றனவே யெனின் இறத்தல் அழிதலல்ல. இறத்தல் என்னும் சொல் முடிதல் தாண்டுதல் எனப் பொருள்படும். இறக்கின்றோம் என்றால் நாம் ஒன்றைத் தாண்டுகின்றோம் என்பதாகும். அதாவது தூல உடலைத் தாண்டுகின்றோம். '' தூல உடல் அரவினது தோல் என்ன நீங்கவே '' என்றார் சிவஞான முனிவர், அகிலாண்டேஸ்வரி யம்மை பதிகத்தில். உலகமோ அழியுந் தன்மை யுடையது. உலகத்தை ஆராயப் புகுந்து, அது அழியுந் தன்மையுடையது, முடிவில் ஒரு பொருளு மில்லை என்று கண்டால் மலை கல்லியும் எலியும் அகப்பட வில்லை என்பது போல் நம் ஆராய்ச்சி பயனற்றதாகிவிடு மல்லவா ! இப்படி அயர்வதற்கு இடந்தராது அப்பருடைய உறுதியான வாக்கு, ''உள் நல்லை நல்லார்க்கு'' என்று அது உணர்த்துகிறது. நம்மாழ்வாரும் '' உணர்வின் மூர்த்தி '' என்றோதுகின்றார். கடவுள் நல்லவர்கள் உள்ளத்தில் இன்பந் தருபவனாயிருக்கின்றான். அவனை ஆராய ஆராய இன்ப முண்டாகும். ஆராயாதிருக்கத் துன்பமே உண் டாகும். ஆராய்ச்சியினால் மட்டுமே அவ்வின்பப் பொருளை அனுபவிக்க முடியும்.

இனி வடமொழி நூல்களில் சென்று ஆராயுமிடத்து ஸ்வேதாஸ்வதரம் 5-வது பாகம் 10-வது ஸ்லோகம், '' நீ அவன் அவள் அது வல்ல '' என்று கடவுளைப் பேசுகிறது. தைத்ரீயம் ''எந்த இடத்திலிருந்து உன்னால் காணப்படுகின்ற இந்த பூதங்கள் தோன்றிற்றோ ; எதனாலே காக்கப்படு

கிறதோ, எதில் இவை இலயம் அடைகிறதோ, அந்தப் பொருளை நீ அறிய முயல்'' என்று கூறுகிறது. வியாச சூத்திரம் (2-வது சூ.) "எங்கேயிருந்து உலகங்கள் தோன்றிற்றோ அது'' என்றமையால் உலக காரணன் கடவுள் என்பது விளங்குகிறது. "ஆன்மாவின் அறிவு சுத்தப் படுவது ஈஸ்வரனை அறிவதால்'' என்றார் நீலகண்ட சிவாச்சாரியார். நாம் அறிவையும் அறியாமையையும் கூடியவராய் இருக்கின்றோம். அறியாமையால் துக்க முறுகின்றோம். அறிவு சுத்தப்பட கடவுளை ஆராய வேண்டும். 'ஒரு மரம், அதில் ஒரு புருஷன் மோகனாகி ஈஸ்வரனை யில்லாமையால் அடிமையாக யிருப்பதால், எப்போதும் துக்கமுடையவனாயிருக்கிறான். தன்னிடத்திலேயே யிருக்கிற ஈஸ்வரனை நினைத்தால் மோகம் நீங்கினவனாவான்'' என்ற அபிப்பிராயத்தை முண்டகம் தெரிவிக்கிறது. ஈசாவாசியமும் இதே அபிப்பிராயப்படுகிறது. நமக்குள்ள இயற்கையறிவும், பல நூல்கள் கற்றதன் பயனாய் வந்த அறிவும், குருமொழியால் உண்டான அறிவும் ஆகிய இவ்வள விருந்தும், ஒன்றைத் தப்பென்று தெரிந்தும் அதை விடாமலிருப்பது மோகமாகும். வாசனை விளாம்பழத்தைக் காட்டி விடுவதுபோல் மோகம் ஆணவமல உண்மையைக் காட்டி விடுகிறது.

ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலை செய்கின்றன. மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் ஆகிய ஏழும் ஆணவமல காரியம். மோகம் எது என்பது முன்னர்க் கூறப்பட்டது. தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் மதமாகும். கிடைக்காத பொருளில் ஆசை கொள்ளுதல் இராகம். கிடைத்த பொருள் பிரிந்ததின் காரணமாகப் படும் துக்கம் கவலை. இறப்பை நோக்கி உற்றார் உறவினரும் பிரிய நேரிடும் என்று நினைந்து வருந்துதல் தாபம். இறந்தாரை நினைத்து உயிரின் அறிவை இழந்து உடலும் இளைத்தல் வாட்டம். உலகத்தில் எல்லாம் வினைவழியாய் நிகழ்கின்றது என்பதை மறந்து, தன்னால் நிகழ்கிறது என்றும், தான் பிறருக்கு நன்மை செய்ததாகவும், தான் பிறருக்குத் தீமை செய்ததாகவும் நினைத்தல் விசித்திரம். இன்ப துன்ப உணர்ச்சி கர்ம மல காரியம். நமக்குக் கிடைத்த உடம்பு அதிலுள்ள மனம், நாம் இருக்கும் இடம்,

அநுபவிக்கும் போகப் பொருள்கள் மாயாமல காரியம். ஆகவே மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலை செய்கின்றன. நம்முடைய அறியாமை இப் பதின் மூன்று வகையா யிருக்கின்றது.

இப்பதின்மூன்றும் நம்மால் ஆராயப்படும் பொரு ளாகிய கடவுளுக்குக் கிடையாது. அப்பொருள் அறியாமை பொருந்திய நம் மனதைச் சுத்தப்படுத்தித் துக்கத்தைப் போக்கி இன்பத்தைத் தருவது. "சிவபெருமானுகிய கடவுளே விமலன், நமக்கு மங்களத்தைச் செய்கின்றவன். நாம் மற்றெல்லாவற்றையும் நீக்கிவிட்டு அவனைத் தியானிக்க வேண்டும்" என்கிற அபிப்பிராயத்தை அதர்வசிகை என்னும் உபநிஷத் தெரிவிக்கிறது. எனவே அவன் பதின் மூன்று வகையாக வேலை செய்யும் மலங்களினின்றும் நீங்கினவன். மலம் அணுதியே இல்லாமையின் சிவன்.

"நிறைமலம் அனுதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்."

என்ருர் சிவஞான முனிவர். நம்முடைய மலங்கள் கழிய நாம் மலமில்லாதவனை - விமலனை - தியானிக்க வேண்டும்.

எவன் தன் ஆன்மாவில் உள்ள கடவுளைப் பார்த்தானே அவன் தான் தீரன் என்று கடோபநிஷத் பேசுகிறது. அக் கடவுள் தூல சரீரத்திலும் (தூணிலும்) சூக்குமசரீரத் திலும் (துரும்பிலும்) இருப்பான். துக்கத்தை அடைத்து வைத்திருப்பவன் துக்கத்தினின்றும் எப்படி நீங்குகிற தில்லையோ அதுபோல் கடவுள் உள்ளே யிருந்தால் மட்டுமே துன்பம் போவதில்லை. துக்கத்தை வெளியில் கொட்டி ஆற்றிவிட்டவன் எப்படி அதனுல் துன்புறுவதில்லையோ அதுபோல் உள்ளிருக்கும் கடவுள் வெளியில் வந்தால்தான் உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடையும். "ஆவுறு பிணிகெட ஆவின் பால் கரந்து ஆவினுக்கு ஊட்டல்போல்" உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே போகச் செய்தால்தான் நமக்கு இன்பம் கிடைக்கும்.

"என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி னும்மினி யானெரு வன்னுளன்

என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே "

என்றார் நாவுக்கரசர். உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே நிறுத்தி வைக்கும் அறிவும் ஆற்றலும் மலத்தால் கட்டுண்டுள்ள உயிர்களாகிய நமக்கு இல்லை. ஆகையால் கருணாமூர்த்தியாகிய கடவுள் உயிர்கள் படும் துன்பத்திற் கிரங்கி அவரே திருமேனி தாங்கி வெளி வருகின்றார். அவர் கொள்ளும் திருமேனி கர்மத்தாலன்று கருணையினாலாகும். " அருளால் மேனி சாத்தி " என்றார் ஒரு பெரியார். " நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு " என்றது சித்தியார். கருணை, தயை, கிருபை, உமை என்பன ஒரே பொருளைக் குறிப்பன. " உமையலா துருவ மில்லை " என்னும் அப்பர் வாக்கை நோக்கவும்.

கருணையினால் கடவுள் வடிவங் கொள்ளும்போது முற்றறிவுடையவனாதலின் உயிர்களின் பக்குவத் தன்மைக் குத் தக்கவாறு ஒன்பது வகைத் திருமேனிகள் கொள்ளு கின்றான். நாதம், விந்து, சத்தி, சிவம் எனும் அருவத் திருமேனி நான்கும், இலிங்கமெனும் அருவுருவத் திருமேனி ஒன்றும், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் எனும் உருவத் திருமேனி நான்கும் ஆக ஒன்பது வடி வங்கள் கொள்கின்றான். பிரமனாய்ப் படைத்தும், விஷ்ணு வாய்க் காத்தும், உருத்திரனாய் ஒடுக்கியும், மகேஸ்வரனாய் மறைத்தும், நாதவிந்து சத்தி சிவமாய் அருளியும் ஐந்தொழில் இயற்றுகின்றான். நிஷ்கிரியத்திற்கு அருவுருவத் திருமேனி கொள்கின்றான். இவ்வொன்பது வடிவங்களாகியும் இவற் றைக் கடந்தும் அவன் இருக்கின்றான்.

கடவுள் கொள்ளும் உருவத்திருமேனிகள், போக வடிவம், கோர வடிவம் யோகவடிவம் என மூவகைப்படும். உயிர்கள் உலக இன்பங்களை அனுபவிக்கப் போக வடிவ மும், உயிர்களின் வினைகழியக் கோர வடிவமும், உயிர்கள் முத்திபெறயோக வடிவமும் கொள்ளுகிறார்.

" போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோகமுத்தி உதவுவதல் அதுவும் ஓரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பரின் ஒருவன் என்பர் "

அம்மையோடு கூடியிருக்கும் வடிவம் போக வடிவம் அதிகை முதலிய வீரஸ்தானங்களில் அம்பு வில் முதலிய ஆயுதங்கள் தாங்கி இருக்கும் வடிவம் கோரவடிவம். தட்சிணா மூர்த்தி வடிவம் யோக வடிவம்.

ஈண்டுப் பேசப்படுவது போக வடிவம். "இடப்பாக மாதராளோடியைந் துயிர்க்கின்பமென்று மடைபரனும்" என்றமையால், உயிர்க்குப் போகத்தைப் புரிய இறைவன் அம்மையோடு கூடிப் போக வடிவங் கொண்டான். உலகத்தின் சாரம் தர்மம். "தர்மசாரம் இதம் ஜகத்" என்றார் வால்மீகர். தருமத்தைப் போற்றிடின் அன்பு வளரும், அன்பு முதிர அருள் விளங்கும். அன்பும் அருளும் வந்தவழி தவம் சித்திக்கும். பின் மனந்தெளியப் பெற்று உயிர் கடவுளைச் சேரும். சேரவே, பிறப்பு நீங்கிப் பழமையாய்ச் சார்ந்திருக்கப்பட்ட மும்மலங்களும் கழிந்து இன்பமுண்டாகும். எனவே தருமத்தின் உயர்வை யாரே அறையவல்லார்.

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழி தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்.

சேர்ந்துழி பிறவியும் தீருந் தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்
போந்திட லரியதோர் பேரின்ப மதனை
ஆர்ந்திடு மதன்பரி சறைய வல்லதோ"

இத்தகைய தருமம் மகா சங்கார காலத்தில் தானும் அழிய நேரிடு மென்றேங்கி யோசித்து விடையுருக் கொண்டு இறைவனை யடைந்து "யான் இற வாமையும் தேவரீருக்கு வாகனமாகுந் தன்மையும் மிக்க வலியுடைமையும் பெற்று உயிர்வாழ அடியேனுக் கருளவேண்டும்" என்று வேண்டி நின்றது. அடைந்தோரைக் காக்கின்ற அருட்கடலாகிய இறைவர் தரும தேவதையை ஏற்றுக் கொண்டு எப்போதும் நீங்காது தன்னிடத்து ஊர்தியாய் வைத்துக்கொண்டார். அந்நாள் முதல் இறைவன் அம்மையோடும் முருகப் பெருமானோடும் தரும தேவதையாகிய விடையை ஊர்ந்து அடியார்களுக்குக் காட்சி கொடுத்தருளா நின்றனன்.

தேரூர்ந்த திரிபுராந்தகன்*

இவ்வுலகத்தைக் காணும்போது நமக்குக் கடவுளைப் பற்றிய எண்ணம் உண்டாகிறது. இவ்வுலகத்தை மாயை என்ற ஓர் இருள் மறைத்துக்கொண்டிருக்கிறது. அவ்விருள் ஒருவாறு நீங்கும் காலம் சம்ஹார காலம் என்று சொல்லலாம். ஆண்டவன் மகாசம்ஹாரத்தை நம் பொருட்டே செய்கிறான். சிருஷ்டி, திதியைக் காட்டிலும் சம்ஹாரமே மேலானது. சம்ஹாரத் தொழில் கொலைத்தொழில் அன்று. அஃது அப்பதத்தின் பொருளைக் கூர்ந்து நோக்கின் விளங்கும். சம்ஹாரம் என்பது வடமொழிப் பதம். அதைச் சம், ஹாரம் என்று இரு சொற்களாகப் பிரிக்கலாம். சம் என்பது செவ்வையாக என்று பொருள்படும். ஹாரம் என்பது இழுத்தலாகும். ஆண்டவன் இவ்வுலகில் அல்லற்படும் உயிர்களைச் சற்று இளைப்பாற்றும் பொருட்டுத் தன்னகத்தே இழுத்து ஒடுக்கிவைத்துக் கொள்கிறான். இதுவே சம்ஹாரமாகும். 'அழிப்பு இளைப்பு ஆற்றல்' என்பர் அருணந்திசிவனார். இவ்வாறு உயிர்களின் இளைப்பை நீக்கும் ஒரு தொழிலை எவரே கொலைத்தொழில் என்பார்? கடவுள் நமது யஜமானன். அன்பு வடிவாக உள்ளவனே யஜமான். சம்ஹாரத் தொழிலைச் செய்வதாலேயே ஆண்டவன் 'ஹரன்' என்று அழைக்கப்பட்டான். இரக்கமே ஆண்டவன் உரு என்பதைக் குறிக்கவேண்டியே திருநாவுக்கரசு சுவாமிகளும் திருமறைக்காட்டுத் தேவாரத்தில் "இரக்கமொன்றிலீர்" என்று கூறினார்.

கடவுள் அருள்திறம்

நமக்கு அடங்கினவன் கடவுள் ஆகான்; கடவுள் நமக்குள் அடங்காதவன். அப்படிப்பட்ட கடவுளின் தன்மை யாது? நம் நிலைமைக்குத் தக்கவாறு அவன் நம்மைப் பக்குவப்படுத்துதல் வேண்டும். உதாரணமாக ஒரு பள்ளிக்

*ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலையில் 29-4-37-ல் நிகழ்த்தியது. திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியார், பி.ஏ., எல்.டி. அவர்களின் குறிப்பு.

கூடத்தை எடுத்துக்கொள்ளலாம். அப்பள்ளிக்கூடத்தில் பல வகுப்புகள் இருக்கின்றன. வெவ்வேறு வகுப்புக்களில் படிக்கும் மாணவர்தம் படிப்பும், திறனும் வெவ்வேறே. அவரவர் நிலைமைக்குத் தக்கவாறே ஆசான் கல்வி புகட்டுவான். ஆசானைப் போன்றவன் கடவுள். பிள்ளைகளே ஆன்மாக்கள். ஆன்மாக்களின் தன்மைக்கேற்பப் பரிபக்குவப்படுத்துதலே ஆண்டவன் அருள்திறம். எப்படி ஆசான் பிள்ளைகளிடத்துத் தம் திறமனைத்தையும் காட்டமாட்டாரோ, அவ்வாறே ஆண்டவனும் ஆன்மாக்களிடத்துத் தன் திறமனைத்தையும் காட்டமாட்டான்.

நம்முடைய சக்தியெல்லாம் மூன்றில் அடங்குவன. அவையே நாமம், ரூபம், கிரியை எனப்படும். அவன் நம்மை ஆட்கொள்ள ஓர் இடத்தை அடைகிருன். உதாரணமாக மயிலாப்பூரை எடுத்துக்கொள்வோம். அவனது வடிவம் ஆண் பெண் ஒன்றியது. நாமும் நம்முடைய சக்தியும் ஒன்று பட்டாலேயே நாமாகிறோம். நம்மிடத்திருந்து சக்தியை வேருகப் பிரித்தல் முடியாது. அவன் ஆண் பெண் வடிவோடு பிள்ளைகளுடனும் காட்சியளிக்கிருன். இறுதியில் நோக்குமிடத்து, எல்லாம் அவனுகவே இருக்கிருன். எனவே, வேதம் ஆத்மாவே புத்திரனுகிருன் என்று கூறுகிறது. நாம் கடவுளை நினைக்கும்போது நம்மைப் போலவே அவனைப் பாவிக்கிறோம். அவன் பல வாகனங்களில் வருதல் அவனுடைய உயர்வைக் காட்டுவது. அவ்வாறு வாகனங்களின்மீது வரும் கோலத்தையே நாம் உத்ஸவம் என்கிறோம்.

உத்ஸவம்

இனி உத்ஸவத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வாம் உத்ஸவம் என்னும் பதம் உத்ஸூயுதே என்னும் பதத்திலிருந்து பிறந்ததாகும். சுகத்தை உண்டுபண்ணுவதென்பது அதன் பொருளாகும். உத்=மேலான பரமேசுவரனுடைய, ஸவம்=வெளியுலாவுதல் என்றும் பொருள் கொள்ளலாம். ஜனங்களை நல்வழிப்படுத்தல் என்பது இதன் பொருளாகும். உத்ஸவத்தின் தாத்பரியங்கள் நான்கு. அவை வருமாறு:— (1) சிருட்டி செய்தல். (2) தம்மை வெளிக்காட்டல். (3) சுகத்தைக் கொடுத்தல். (4) வந்து பார்த்தல். முன்னர்க்

கூறியவாறு சம்ஹாரத்தில் அனுக்கிரகம் அடங்கும். சம்ஹாரம் என்பதன் பொருளே துக்கம் போய்ச் சுகம் வருதல் என்பதாகும். ரதாரோகணம் சம்ஹாரத்தின் பாற்பட்டது. தேர் என்ருல் சம்ஹாரம் என்று பொருள்.

இரதோத்ஸவம் சில ஊர்களில் ஏழாவது நாளிலும், சில ஊர்களில் ஒன்பதாவது நாளிலும் நடைபெறுகிறது. இரதோத்ஸவத்தின் உட்கருத்தை உன்னிப் பாருங்கள். பூமியையே ஆண்டவன் இரதமாகக் கொண்டிருக்கிருன். பூமிக்கு இருவித ரூபம் உண்டு. ஒன்று பிராகிருதம்; நேரிற் காண்பது. மற்ருென்று தெய்விகம். பூமியைப் பூமாதேவி என்று கூறுதல் உபசரிப்பு. இது, தேவதையை அதி தேவதை என்று கூறினுற்போல. இத்தெய்விகத் தன்மையைக் கருதியே திருவிளையாடற் புராண உத்தரகுமாரப் படலத்தில் 'மேருமலை மனைவியுடன் பேசினுன்' என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது.

தேர்

பூமியாகிய தேரிற் கட்டப்பட்ட குதிரைகள் நான்கு. அவற்றின் நிறம் வெண்மை. இந்நான்கு குதிரைகளும் தோஷமில்லாத நான்கு வேதங்களைக் குறிக்கின்றன. வேதம் என்னும் பதம் வித் என்ற தாதுவின் அடியாகப் பிறந்த சொல். வேதங்கள் தர்மத்தைக் கூறுகின்றன வென்று தைத்திரியோபநிஷத் கூறுகிறது.

சாரதி

இவ்வித இரதத்துக்குச் சாரதியாக அமைந்தவன் பிரமன். ஆண்டவன் வேதங்களைப் பிரமாவுக்குக் கற்றுக் கொடுத்தான். எதன் பொருட்டு? அவன் மூலமாக வேதங்கள் உலகில் பரவுதல் வேண்டும் என்று கருதியே. பிரமனுக்கு நான்கு முகங்கள். ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு திசையைப் பார்க்கின்றன. அதனுல் தேருக்கு எவ்வித ஆபத்தும் உண்டாகாது. எனவே, பூமியாகிய இரதத்தை வேதமாகிய குதிரைகளைப் பூட்டி ஒழுங்காக நடத்துபவன் பிரமா.

சக்கரங்கள்

இப்பூமியாகிய இரதத்துக்குச் சக்கரங்களாக அமைந்தவர் சூரிய சந்திரர். சூரிய சந்திரர் இவ்வுலக வளர்ச்சிக்கு

இன்றியமையாதவர். எனவே, இரதத்துக்கு முக்கியமான சக்கரங்களாக அவர்கள் அமைந்தார்கள். சூரியன் அசுத்தத்தைப் போக்குவது. இதையொட்டியே இக்காலத்துக் கோவில்களில் சூரியன் முதல் சண்டேசுரர் ஈறாக உள்ளவர்களுக்குப் பூசைகள் நடைபெறுகின்றன. கோவில்களில் முன் காலத்தில் நவக்கிரகங்கள் கிடையா. பைரவர் கோயில் காவலர், அவருக்குப் பக்கத்தில் இருப்பவர் சூரியர். அவர் இல்லாவிட்டால் சிவபூசை இல்லை. ஆன்மாவைச் சத்வ குணத்தில் புக வைப்பது சூரியன்; இன்பத்தை உண்டாக்குவது சந்திரன். சூரியன் முன் சூரியகாந்தக்கல் நெருப்பை உண்டாக்குகிறது. இது சிருஷ்டியைக் குறிப்பது. சூரியோதயத்தைக் கண்டு தாமரை மலர்கிறது. அது ரட்சையின் பாற்படும். நீரிலிருந்து தாமரைக் கொடியைப் பிடுங்கி எறிந்தால் அது தன்னை மலர்வித்த சூரியனாலேயே எரிக்கப்படுகிறது. இது சம்ஹாரம். எனவே, சூரியனிடத்திலேயே சிருஷ்டி, ரட்சை, சம்ஹாரம் என்ற முக்குணங்களும் அடங்கியுள்ளன.

வில்

சிவபெருமான் கையில் வில்லைத் தாங்கியுள்ளார். கால் பெருவிரல் முதல் நெற்றிவரை உள்ளது வில். தனக்குக் குறைந்த மேருவைக் கடவுள் வில்லாகத் தாங்கியுள்ளார். மேருமலை பொன் வடிவாயுள்ளது. ஆண்டவன் அனல் வடிவினன். அனலின் முன் பொன் உருகுதல் இயற்கை. அதனால் வில் உருகுந்தன்மை யுடையது. மற்றவர்களைப் பாவத்துக்குள்ளாக்குதல் கூடாதென்றெண்ணியே ஆண்டவன் வில்லை ஏந்தியுள்ளான். அவ்வில்லுக்கு அம்பாக உள்ளவர் விஷ்ணு. அதன் நுனி அக்கினி தேவன். எதிரிகளை அக்கினி எரிக்கும். வில்லுக்கு நாணாக அமைந்தது ஆதிசேஷன். அவன் அறிவிற் சிறந்தவன். அறிவு இல்லாவிடின் எக்காரியமும் நடைபெறாது. இந்த இரதத்தின் இறகுகளாக உள்ளவன் வாயு.

பொதுவாகச் சமுத்திரத்தின்மீது போகும்போதும், சண்டைக்குச் செல்லும் போதும், தனந்தேடப் போகும் போதும் மனைவியுடன் செல்லுதல் கூடாது. ஆனால் ஆண்டவன் யுத்தத்துக்குப் போகும்போது மனைவியை உடன்

அழைத்துச் செல்கிறன். பெண்மை இரக்கத்தைக் குறிப்பது. எனவே சக்தி உடன் செல்வது ஆண்டவன் இரக்க நெஞ்சை உடையவன் என்பதைக் காட்டுகிறது. இரதத்தில் இளங் குழந்தையும் உடன் செல்கிறது.

முப்புரமெரித்தல்

இவ்வாறு இரதத்தில் எதற்காகச் செல்கிறுர்? முப்புரத்தை எரிப்பதற்காக. மனிதருக்கு மூன்று சரீரங்கள் உண்டு. அவை ஸ்தூலம், சூக்குமம், காரணம் எனப்படும். அம்மூன்று உடலங்களுக்கும் காரணமா யிருப்பவை மூன்று மலங்கள். அவைகளே ஆணவம், கன்மம், மாயை எனப்படும். இம்மூன்று மலங்களேயும் அழிப்பதற்காகவே, ஆண்டவன் மும்மல காரியத்தை மேற்கொண்டார். எனவே, 'முப்புரமாவது மும்மல காரியம்' என்று திருமந்திரம் கூறுகிறது. மும்மலங்களுக்கு மோகம் முதலிய பதின்மூன்று காரியங்கள் உண்டு. மலங்களில் மூன்று விதம் இருத்தல்போல் மனிதரிலும் மூன்று விதமானவரைக் காணலாம்.

கடவுளின்றி இவ்வுலகத்தில் நாம் எதையும் செய்தல் இயலாது. கண் மட்டும் ஒரு பொருளேக் காணமுடியாது. அக்கண்ணேடு உயிரும் சேர்ந்தாலேயே பொருள்களேக் காணுதல் கூடும். அதுபோலவே உயிரோடு ஆண்டவன் சேர்ந்தாலேயே உயிருக்கும் இயக்கும் சக்தி உண்டாகிறது. கடவுளிடத்து நாம் இடையரு அன்புடையவராய் இருத்தல் வேண்டும். இதுவே அயரா அன்பு என்று கூறப்படுகிறது. பராபக்தி என்பது மேலான பக்தியாகும். இரதோத்ஸவத்தில் பராபக்தி மார்க்கமும் உண்டு. கெட்ட பக்தியும் உண்டு. பராபக்தியால் நல்ல நிலேயைப் பெற்றவர் மூவர். அவரே சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்போர். அவர்கள் முறையே தர்மம், ஆசாரம், அறிவு என்ற மூன்றையும் குறிப்பவர்கள். கெட்ட பக்தியால் இறந்தவர் மூவர். அவர் தாரகாட்சன், வித்யுந்மாலி, கமலாட்சன் எனப்படுவோர்.

தேரூர்ந்த திரிபுராந்தகன், அக்கினி, பிரமா, வாயு முதலியவர்களேக் கொண்டு வெற்றிபெற்றுல் அவர்களுக்குக் கர்வம் உண்டாகும் என்று எண்ணிப், புன் சிரிப்பாலேயே முப்புரங்களேயும் எரித்தான்.

முத்தித் தலைவர்*

காலம் - ஒரு தத்துவம். அது மாயையில் அசுத்த மாயையில் தோன்றுகிறது. தத்துவங்கள் மூவகை. அவை ஆத்தும தத்துவம், வித்யாதத்வம், சிவதத்துவம். அவை முறையே 24, 7, 5. இம்முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மக்களாகிய நாம் அடங்கிக் கிடக்கின்றோம். இவற்றைக் கடந்து நிற்பவன் கடவுள். இத்தத்துவங்கள் அறிவற்றன. நாம் அற்ப அறிவினையுடையோம். ஆகலின் இவற்றிற்குக் கட்டுப்பட்டு வாழ்கிறோம். இறைவன் காலகாலன். நாம் செய்யவேண்டுவது காலத்தையொட்டிக் காலத்தை வெல்வதே. இறைவன் தயவு இயையின் நாம் வெல்லுதல் கூடும்.

வால்மீகி தம் இராமாயணத்தில் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் வாயிலாக "எவராயிருப்பினும் கார்த்திகேயனிடத்தில் பக்தி பண்ணுபவர் புதல்வர் முதலிய பல பேறுகளைப் பெறுவர்" என்று சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது.

பார்; நின்றிடுவர் பார்; பக்திதனில் நின்றிடுவர் பார்; எப்படிப்பட்ட பக்தி? மும்மலமும் மோசிக்கும் பக்தி. யார் நின்றிடுவர்? முத்தித்தலைவர். எனவே முத்தித்தலைவர் மும்மலமும் மோசிக்கும் பக்திதனில் நின்றிடுவர் பார். பக்தியால் இறைவன் தயவு இயைய முத்தி சித்திக்கும் என்பதையே இத்தொடர் விளக்குகிறது.

---

*1938-ல் திருமயிலை வெள்ளீசுரர் ஆலயத்தில் கந்தர் சஷ்டிச் சொற்பொழிவுகள் ஞானியாரடிகள் செய்தார்கள். அதுசமயம் எடுத்த குறிப்புகள்.